விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்


Thamil Naatham

இராகம் 01 | தாளம் 60 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (11.09.2012) | பக்கங்கள்: பதினாறு

புகைத்தலை தவிர்ப்போம்

## கிழக்கில் கூட்டமைப்புக்கா? ஐ.ம.சு.மு.வுக்கா? ஆதரவு

# முஸ்லிம் காங்கிரஸின் இறுதி தீர்மானம் இன்று வெளியாகும்



சம்பந்தன் எம்.பி.யுடன் அமைச்சர் ஹக்கீம்

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலின் முடிவுகளின் அடிப்படையில் மாகாண ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் எந்த தரப்பிற்கு ஆதரவு அளிக்கின்றதோ அந்தத் தரப்பினால் மட்டுமே கிழக்கில் ஆட்சியமைக்க முடியும் என்ற சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இன்று நடைபெறவுள்ள உயர்மட்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னரே இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படுமென்று மு.கா. அறிவித்துள்ளது.

கிழக்கில் 15 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தன்வசம் வைத்துள்ளது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டாக தம்மகத்தே 15 ஆசனங்களை 02

### வர்த்தமானியின் பின்னரே ஆட்சியுரிமை கோரலைக் கவனத்தில் கொள்வோம்

**கிழக்கு ஆளுநர்**

கிழக்கு மாகாணசபைக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர் விபரங்கள், தேர்தல் ஆணையாளரினால் வர்த்தமானி அறிக்கையில் வெளியிடப்படும்வரை மாகாணசபை நிர்வாகம் தொடர்பில் 02

## மத்தியில் அரசுடன் இருந்து கொண்டு கிழக்கில் கூட்டமைப்புடன் இணைவது சாத்தியமற்றது

**மு.கா.பிரதித் தலைவர்**

மத்திய அரசாங்கத்தில் இருந்து கொண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முடிவு எடுப்பதென்பது சாத்தியமற்றதாகவே இருக்கும். எவ்வாறாயினும் உறுதியான முடிவுடனேயே நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான காபீஸ் நஷீர் அகமர் சயினுலாப்தீன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணம் முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரைக் கொண்ட முஸ்லிம் மாகாணமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். இலங்கையின் ஏனைய 7 மாகாணங்களும் 02

## முஸ்லிம் காங்கிரஸிற்கு போதியளவு விட்டுக் கொடுப்புகளை செய்துள்ளோம்

**மாவை சேனாதிராசா எம்.பி.**

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிசுடன் இணைந்து தமிழரசுக்கட்சி ஆட்சியமைப்பதற்காக தம்மால் இயலுமானளவு விட்டுக்கொடுப்புகளை தமிழரசுக் கட்சி செய்துள்ளது. என தெரிவித்துள்ள கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா முஸ்லிம் காங்கிரசின் முடிவு இன்று தெரிய வரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



கிழக்கு மாகாண சபையே கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ள தமிழரசுக்கட்சி அங்கு ஆட்சியமைப்பதற்கு தேவையான ஆதரவை 02

## தியத்தலாவையில் 5 இராணுவத்தினர் உயிரிழப்பு

தியத்தலாவை இராணுவ முகாமில் மண் திட்டொன்று இடிந்து வீழ்ந்ததில் 5 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

இராணுவ முகாமுக்குள் அபிவிருத்தி திட்டமொன்றை செயற்படுத்திக் கொண்டிருந்த 02

## கிராம உத்தியோகத்தர்கள் சிவில் பாதுகாப்புக் குழுவில் இருக்க வேண்டும்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

கடந்தகால அரசியல் தலைவர்களே யுத்தத்திற்கு வித்திட்டதுடன், எமது மக்களை கையேந்த வைத்தவர்கள் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாண பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் 02

## கூட்டமைப்பு இனப்பிரச்சினை தீர்வு நோக்கி நகர வேண்டும்

**நம்பி வாக்களித்த மக்களுக்காக இதைச் செய்ய வேண்டுமென்கிறார் பிரபா கணேசன்**

நடந்து முடிந்த மாகாண சபை தேர்தலில், கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பினரும் அதிகளவிலான வாக்குகளைப் பெற்றிருக்கின்றார்கள். வாக்குகளைப் பெற்றவர்கள் மாகாணசபை மூலமாக மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு 02


## திருநெல்வேலி வாள்வெட்டு: 7 பேர் கைது

யாழ்.திருநெல்வேலி வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் 7 பேர் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். 02

## மு.கா ஆதரவளிக்காவிட்டால் வரலாற்றுத் தவறாக அமையும்

**அரியநேந்திரன் எம்.பி.**

கிழக்கில் நடைபெற்ற முடிந்த தேர்தல் முடிவுகளின்படி தமிழரசுக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸூம் இணைந்து ஆட்சியமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த சந்தர்ப்பத்தை முஸ்லிம் காங்கிரஸ் பயன்படுத்தாமல் விடுமேயானால் அது ஒரு வரலாற்றுத் தவறாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.



தேர்தலின் பின்னரான 10

## நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம்: மன்னாரில் 41 பேருக்கு விளக்கமறியல்

மன்னார் நீதிமன்றம் மீது தாக்குல் மேற்கொண்ட சந்தேக நபர்கள் 41 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற போதே, குறித்த சந்தேக நபர்கள் 41 பேரையும் செப்டம்பர் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க உத்தரவிட்டார்.

கடந்த ஜுன் மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரினால் 02

## அமைச்சர் ரிஷாத்தை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீனை எதிர்வரும் 24ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் ஆஜராகுமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க நேற்று திங்கட்கிழமை 02

# வட்டு. வடக்கு கற்பகப் பிள்ளையார் கொடியேற்றத் திருவிழா இன்று

வட்டுக்கோட்டை வடக்கு, பிரமனாச்சி தோட்டம், அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று (செவ்வாய்க்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

இன்று காலை 10.00 மணியளவில் கொடியேற்ற வைபவமும், எதிர் வரும் 17 ஆம் திகதி (திங்கட்கிழமை) மாலை வேட்டைத் திருவிழா வும், 18 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மாலை சப்பரம் திருவிழா வும், 19 ஆம் திகதி (புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு தேர்த்திரு விழாவும், 20 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'கற்பக கணேச குண்ட' புனித தீர்த்தக் கேணியில் விநாயகப் பெருமானின் தீர்த்தோற்சவ நிகழ்வும் நடைபெறும்.

சிவஸ்ரீ ச.மு.பாஸ்கரக் குருக்கள் மஹோற்சவ கால சிவாச்சாரியா ராகவிருந்து கிரியைகளை நடாத்திவைப்பதுடன் தேவஸ்தான குரு பிரமஸ்ரீ ச. நந்தராஜசர்மா அவர்களும் இவருக்கு உதவியாக இருந்து மஹோற்சவ செயற்பாடுகளை மேற்கொள்வார்.

# அமைச்சர் ரிஷாத்தை...(தொடர்)

உத்தரவிட்டார். அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மன்னார் நீதி மன்ற உத்தரவின்படி ஏற்கனவே கடந்த மாதம் 27ஆம் திகதி மன் னார் நீதிமன்றில் ஆஜராகி இருந்தார்.

இதன்போது அமைச்சரை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் ஆஜ ராகுமாறு மன்னார் மாவட்ட மேல திக நீதவான் ஆர்.எஸ்.ஏ.திஸா நாயக்க ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தொடர்பான பி 408 - 12 எனும் இலக்க வழக்கு நேற்று திங்கட்கிழமை விசேட நகர்தல் பத்திரம் மூலம் மன்னார் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத் துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கை சிரேஸ்ட சட்டத்தரணி இ.கயஸ் பெல்டானோ நேற்று மன்னார் நீதிமன்றில் விசேட நகர்தல் பத்திரம் ஒன்றினை தாக் கல் செய்து குறித்த வழக்கை அழைக்குமாறு நீதிமன்றில் விண் ணப்பம் செய்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டதை அடுத்து மனுதாரர் சார்பில் நீதி மன்றில் ஆஜராகியிருந்த சட்டத் தரணி மகேந்திர குமார சில்வா, அமைச்சர் ரிஷாட் பதியூதின் தொடர் பாக இரகசிய பொலிஸார் மேற் கொண்டு வரும் விசாரணைகளின் அறிக்கை இதுவரை மன்னார் நீதி மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் குறித்த வழக்கு தொடர் பாக சட்டமா அதிபர் விசாரணை- களை மேற்கொண்டு வரும் நிலை யில் அது தொடர்பான அறிக்கை யும் மன்னார் நீதிமன்றில் சமர்ப் பிக்கப்படவில்லை என சட்டத்த ரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

இவ்விதம் அறிக்கைகள் நீதி மன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலை யில் அமைச்சர் றிஸாட் பதியுதீன் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றத் தினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி அழைக்கப்பட விருந்த வழக்கினை இம்மாதம் 24ஆம் திகதி முன்கூட்டியே அழைக்குமாறும் கோரிக்கை யினை அவர் முன்வைத்தார்.

குறித்த விண்ணப்பத்தினை ஏற் றுக்கொண்ட மேலதிக நீதவான் ஆர்.எஸ்.ஏ.திஸாநாயக்க அமைச் சரை, இம்மாதம் 24ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் இது தொடர்பில் அமைச்சருக்கு பதி வுத்தபால் மூலம் அறிவித்தல் வழங்குமாறும் உத்தரவிட்டார்.

# இன்று இணையத்தளத்தில் வாழ்வகம் நிகழ்ச்சிகள்

இன்று சுன்னாகம் வாழ்வகம் இல்லத்தில் நடைபெறும் ஸ்தாப கர் கலாநிதி அன்னலட்சுமி சின் னத்தம்பி நினைவுதினம் மற்றும் நினைவுப் பேருரை நிகழ்ச்சிகளை காலை 8.45 மணி முதல் www.ustream.tv/channel/vaazh-vaham என்ற இணையத்தளத் தின் ஊடாக நேரடி ஒளிபரப்பாக அனைவரும் பார்க்க முடியும்.

# கூட்டமைப்பு இனப்பிரச்சினை...(தொடர்)

மாவட்ட பாராளுமன்ற உறுப்பின ருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது,கிழக்கில் முஸ் லிம் காங்கிரஸ் தீர்மானிக் கும் சக்தியாக இன்று மாறியுள்ளது.

கிழக்கு மாகாணசபை தேர்த லில் கடந்த காலங்களைவிட தமிழ் கூட்டமைப்பினர் அதிகமான வாக் குகளைப் பெற்றிருக்கின்றார்கள். கிழக்கு மாகாண ஆட்சியை தமிழ் கூட்டமைப்பினர் அமைத்தாலும் அமைக்காவிட்டாலும் கூட மக் களின் எதிர்ப்பார்ப்பு அவர்கள் மீது அதிகமாக இருக்கக்கூடியதாக உள்ளது.

தேர்தலில் ஒட்டு மொத்த தமிழ் வாக்குகளை தமிழ் கூட்டமைப் பினர் கோரியிருந்தனர். தமது வாக்கு பலத்தை சர்வதேசத்திற்கு தெர- ியப்படுத்த வேண்டும் எனவும் கூறியிருந் தனர். இதன் மூலம் இனப்பிரச் சினைக்கான தீர்வை பெற்றுத் தருவ தாகவும் உறுதியளித்திருந்தனர்.

இதனடிப்படையிலேயே தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களித் தனர். மீண்டும் அடுத்த தேர்தல் வரும் பொழுது இதே வாக்குறு தியை முன்வைக்காமல் இத்தேர்த லில் கிடைத்த வெற்றியை மனதில் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகர வேண்டும என அவர் மேலும் கூறியுள்ளார்.

# திருநெல்வேலி...(தொடர்)

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின்போது ஒருவர் வாள் வெட்டுக்கு இழக்காகி உயிரிழந் ததுடன் மேலும் ஒருவர் காயங்க ளுக் குள்ளான நிலையில் வைத்தி யசா லையில் அனுமதிக்கப்பட்டார்.

# மன்னார் நீதிமன்றம் மீதான...(தொடர்)

மன்னார் நீதிமன்றம் மீது தாக் குதல் நடாத்தப்பட்டதோடு பொதுச் சொத்துகளுக்கும் சேதம் விளை விக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சம் பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 20 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள் ளதோடு மேலும் பலரை மன்னார் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் 11 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். இதற்கு மேலதிகமாக ஏனைய 10 சந்தேகநபர்களும் நேற்றுக் காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். குறித்த 21 சந்தேக நபர்களி டம் முழு மையான வாக்கு மூலத்தை பெற்றுக் கொண்ட மன்னார் பொலிஸார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன் போது குறித்த 41 சந்தேக நபர்களையும் இம்மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமற- ியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். சந்தேக நபர்கள் சார்பாக 3 சட்டத்தரணிகள் நீதி மன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளவர்களில் மன்னார் நகர சபையின் உறுப்பினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், வைத்திய சாலை பணியாளர்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் என பலர் அடங்குகின்றமை குறிப்பி டத்தக்கது.

# மத்தியில் அரசுடன்... (தொடர்)

சிங்களவர்களினதும், வடமாகா ணம் தமிழர்களுக்கானது என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் கிழக்கு மாகா ணம் முஸ்லிம் முதலமைச்சரைக் கொண்ட மாகாணமாக இருக்க வேண் டும் என்பதே எமது எதிர்ப்பார்ப் பாகும் எனவும் அவர் கூறினார். இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கில் தமிழ் தேசியக் கூட் டமைப்புடன் இணைந்து ஆட்சிய மைப்பது என்றால் அரசாங்கத் தில் இருந்து விலகியே அத னைச் செய்தாக வேண்டும். எப் படியிருந்தாலும் உறுதியான முடி வுடனேயே நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

திங்கட்கிழமை இரவு நடை பெறும் உயர்மட்டக் கலந்துரை யாடலின் பின்னர் முடிவு காணப் படும். எவ்வாறானாலும் புதன்கிழ மைக்கு முன்னர் முடிவு எடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றார்.

# தியத்தலாவையில்...(தொடர்)

வேளை இவ்விபத்து ஏற்பட்டுள் ளது.

விபத்தில் காயமடைந்த மேலும் இரு இராணுவ சிப்பாய்கள் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

நேற்றுக் காலை இவ்விபத்து இடம்பெற்றதாக இராணுவ ஊட கப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# கிராம ...(தொடர்)

கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவின் கீழும் அமைக்கப்பட்ட சிவில் பாதுகாப் புக் குழுவில் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

அத்துடன் கடந்த கால அரசி யல் தலைமைகள் விட்ட தவறு களினாலேயே எமது மக்கள் அழிவு யுத்தத்திற்கு முகம் கொடுத் ததுடன் கையேந்தும் நிலைமைக் கும் உள்ளாகினர் என்றும் அந்த நிலையை மாற்றியமைப்பதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் அமைச்சர் கேட் டுக் கொண்டார்.

# வர்த்தமானியின் பின்னரே...(தொடர்)

கட்சிகளின் செயலாளர்களினால் விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது என்று கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜே விக்கிரம தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணசபை தொடர்பில் உள்ள சட்டதிட்டங் களுக்கு உட்பட்டே தான் எந்த வித நடவடிக்கையையும் முன்னெ டுப்பதாகவும் ஆளுநர் அறிவித்தார்.

இது இவ்வாறிருக்க, கிழக்கு மாகாணசபைக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர் விபரங் கள், தேர்தல் ஆணையாளரினால் வர்த்தமானி அறிக்கையில் வெளி யிடப்படும் வரை மாகாணசபை நிர்வாகம் தொடர்பில் கட்சிகளின் செயலாளர்களினால் விடுக்கப் படும் கோரிக் கைகள் கவனத் திற் கொள்ளப்பட மாட்டாது என்று கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக் கிரம தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணசபை தொடர்பில் உள்ள சட்டதிட்டங் களுக்கு உட்பட்டே தான் எந்த வித நடவடிக்கையையும் முன்னெ டுப்பதாகவும் ஆளுநர் அறிவித்தார்.

இந்த நிலையில், கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதம் ஒன்றை இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்த னும் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசாவும் கையெழுத்திட்டு ஞாயிற்றுக்கிழமை பகல் தொலை நகல் மூலம் மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்கிரமவிற்கு அனுப்பிவைத்தனர்.

# முஸ்லிம் காங்கிரஸி...(தொடர்)

முஸ்லிம் காங்கிரசிடம் கோரி யுள்ளது. இந்நிலையில் முஸ் லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவ ளிப்பதா அல்லது தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரளவளிப் பதா என்பது குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் கள நிலவரம் பற்றி கேட்டபோதே மாவை சேனா திராஜா எம்.பி. தமிழ்நாதத்திற்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில் கிழக்கு மாகா ணத்தில் கணிசமான வாக்குக ளைப் பெற்று ஆட்சியமைக்கக் கூடிய நிலையில் தமிழரசுக்கட்சி உள்ளது. இதனால் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சிய மைப்பதற்கான உரிமையைக் கோரி தமிழரசுக்கட்சி ஏற்கனவே மாகாண ஆளுநருக்கு தொலைந- கல் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதம் ஆளுநரை சென்ற டைந்துள்ளமையும் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆளு நரை நேரில் சந்தித்து கடிதம் ஒன்றை வழங்க வேண்டிய தேவை இல்லை.

இதன்மூலம் ஆட்சியமைப்பதற் கான எமது கோரிக்கை மாகாண ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ் லிம் காங்கிரசுடன் இணைந்து தமிழரசுக்கட்சி ஆட்சியமைப்ப தற்கு வாய்ப்புகள் உள்ளது. இத னால் ஆட்சியமைக்க எம்முடன் இணையுமாறு கோரிக்கை விடுத் துள்ளோம். மேலும் அவர்களை எம்முடன் இணைத்துக்கொள் வதற் காக போதிய அளவு விட்டுக் கொடுப்புகளையும் செய்துள் ளோம். இருப்பினும் அவர்கள் இன் னமும் தமது இறுதி தீர்மா னத்தை எம்மிடம் அறிவிக்கவில்லை. நாளை (இன்று 11.09.2012) நடை பெறவுள்ள முஸ்லிம் காங்கிரசின் அதிஉயர் பீடத்துடனான சந்திப் பின் பின்னர் அவர்களது முடிவு குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்கள். அதுவரையில் நாம் பாத்திருக்கிறோம். என மாவை சேனாதிராஜா எம்.பி. மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸின் இறுதி...(தொடர்)

கொண்டுள்ளன. இதனால் 7 ஆசனங்களை கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு எந்த தரப்பிற்கோ அந்தத் தரப்பே கிழக்கில் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலையில் கிழக்கு மாகா ணசபையில் யார் ஆட்சியமைப் பது என்ற விடயம் தங்கியுள்ளது.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அமைப்பது யார் என்பது தொடர் பில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னனியே மீண்டும் ஆட்சி அமைப் பதற்கான வாய்ப்புகள் உள்ள தாக கிழக்கு மாகாண முதல மைச்சர் சிவனேசதுரை சந்திர காந்தன் கூறுகிறார்.

எனினும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு யாருக்கு என்பதிலேயே கிழக்கில் யார் ஆட்சி அமைப்பது என்ற நிலை உள்ளது.

“ஆளுங்கட்சி - முஸ்லிம் காங் கிரஸ் கூட்டணி ஆட்சிக்கே வாய்ப்பு அதிகம் உள்ளது. கிழக்கு மாகா ணத்தைச் சேர்ந்தவரே முதல மைச்சராக வரவேண்டுமே தவிர, அவர் முஸ்லிமா அல்லது தமி ழரா என்ற பிரச்சனை இல்லை என்று பிபிசி தமிழோசையிடம் சந் திரகாந்தன் சுட்டிக்காட்டினார்.

ஆனால் கிழக்கில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரமுடி யாமல்போனால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பொறுப் பேற்க வேண்டும் என்றும் அவர் கூறுகின்றார்.

எதிரணியினருக்கே கூடுதல் இடங்கள் கிடைத்துள்ளதாக கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தாம் எதிரணிகளுடன் இணைந்து ஆட் சியமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கிறார்.

இதற்கிடையில், ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸுடன் அரசாங்கத் தரப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் மாறிமாறி பேச் சுக்களை நடத்தியிருப்பதாக அக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக் கீம் கூறினார். ஆனால் அந்தக் கட்சி எந்த முடிவையும் இன்னும் அறிவிக்க வில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்துள்ளது.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாது காப்பதாக தமிழ் தேசியக் கூட்ட மைப்பு வாக்குறுதியை வழங்கி னால் தமது கட்சி தமிழ்க் கூட்ட மைப்புக்கு ஆதரவு அளிக்கும் என்று அக்கட்சியின் பொதுச் செய லர் திஸ்ஸ அத்தநாயக்க அறி வித்துள்ளார்.

# முஸ்லிம் ஒருவரை முதல்வராக நியமிக்க கூட்டமைப்பு தயார்

ஊழலற்ற, நேர்மையாக செயற்படக்கூடிய முதலமைச்சர் ஒருவர்தான் எமக்குத்தேவை. அவர் முஸ்லிமா, தமிழரா என்பது முக்கியமல்ல. அத்துடன் தேவைப்பட்டால் முஸ்லிம் ஒருவரை முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளவும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியுள்ளது. கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்தும் மாகாண சபை நிர்வாகத்தை அமைப்பது குறித்தும் பத்திரிகையாளர்களுக்கு இன்று மாலை கருத்து தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இது குறித்துக் கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களால் எமக்குத்தரப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்றவேண்டியது எமது கடமை. மேலும் கிழக்கு மாகாண ஆளுநர் - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மாகாண ஆட்சியை அமைக்க அழைத்தால் அதனை நாம் சட்டரீதியாக தடுப்போம்.

கிழக்கு மாகாண தேர்தலை நடத்திய முறை மூலம் எமக்கு கிடைக்கவேண்டிய வெற்றியை அரசாங்கம் சூறையாடியுள்ளது. இந்த தேர்தலில் அரசாங்கத்தை எதிர்த்த கட்சிகள் மூன்றும் வெற்றி பெற்றுள்ளது.

மூன்று கட்சிகளின தும் மொத்த ஆசன எண்ணிக்கை 22. ஆனால் அரசாங்கம் மற்றும் அதனோடு இணைந்து செயற்படக்கூடிய இன்னுமொரு கட்சி ஆகிய இரண்டினதும் ஆசன எண்ணிக்கை 15. எனவே ஐ.ம.சு.மு. மாகாண ஆட்சியை அமைப்பதை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் எமது கட்சிப் பொதுச் செயலாளர் - மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன 22 ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ளன. எனவே கிழக்கு மாகாண ஆட்சியை அமைக்கத் தேவையான பெரும்பான்மைப் பலம் எமக்கு உள்ளது என்று மேலும் குறிப்பிட்டார்.

## இரா.சம்பந்தன்



இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்க எதிரணிக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். அதற்கு பெருந்தன்மையுடன் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரசுக்கு முதலமைச்சர் பதவியை வழங்க வேண்டும் என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது கடந்த கால வரலாற்று தவறுகள் மாற்றியமைத்து தமிழ்-முஸ்லிம் உறவை கட்டியெழுப்புவதுடன், இது தமிழ் பேசும் மக்களது விருப்பம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பில், மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை நாம் சப்ரகமுவ தேர்தலில் எடுத்து காட்டியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'கலிங்கம்' இதழ் வெளியீடு

(மாவிட்டபுரம்)

யாழ்.எயிட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் பல்சுவை இரு மாத இதழாக கலிங்கம் எனும் இதழ் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. செ.கமலக்கண்ணன் வ.பார்த்தீபன், திருமதி ர.தர்மினி ஆகியோரை ஆசிரியர் குழுவாகவும் தி.நடன சபேசன் அவர்களை ஆலோசகராகவும் கொண்டு இவ் இதழ் வெளிவந்துள்ளது.

இவ் இதழின் உள்ளே யாழ்ப்பாணப்பல்கலைக்கழ முன்னாள் துனைவேந்தர் பேராசிரியர் என் சன்முகலிங்கன், பேராதனைப் பல்கலைக்கழ முன்னாள் விரிவுரையாளர் எஸ்.வரதராஜன், இந்து நாரிகத்துறை விரிவுரையாளர் திருமதி ச.அருள்நங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உளவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கஜவஜந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழ சட்டத்துறை விரிவுரையாள் கே.குருபரன் உள்ளிட்டோரின் படைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## சிறுவனை இழுத்து சென்றது முதலை

அக்குரஸ்ஸ - பரதுவ கிராம சிறுவன் ஒருவன் நில்வளா கங்கையில் நீராடச் சென்றபோது அச்சிறுவனை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

முதலைக்கான தடுப்பு வேலியோ, பாதுகாப்பு ஏற்படுகளற்ற இடத்தில் நேற்றுமுன்தினம் மாலை குறித்த சிறுவன் நீராடச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

இந்நிலையிலேயே சிறுவனை முதலை இழுத்து காணாமல் போயுள்ளவர் 12 வயதுடைய செல்வன் ரொஷான் எனத் தெரிய வந்துள்ளது.

அக்குரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நிபந்தனையுடன்தான் கிழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவு

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக்கட்சிக்கு அழைப்பு விடுக்குமாயின் அதற்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் அடையாளம், கொள்கைக்கு அமைய, நாட்டின் இறையாண்மை பாதுகாத்து, சட்டம், ஜனநாயகம் ஆகியவற்றை மதித்து, கல்வி மற்றும் சுகாதாரம் என்பவற்றை பாதுகாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்குமாயின் அந்த கட்சிக்கு ஆதரவு வழங்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்க கிடைத்துள்ள ஆசனங்களின் படி எந்த கட்சிக்கும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தாம் அரசாங்கத்திற்கு எதிரான தரப்புக்கு ஆரதரவு வழங்க வேண்டும் என தீர்மானித்துள்ளதால், இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக தற்போது, பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.



## நாடக போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகள்

(மாவிட்டபுரம்)

வடமகாணக்கல்வித்திணைக்களத்தினால் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் சிறுவர் நாடகப் போட்டியில் வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் நாடகப்போட்டி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது. இப்போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தினைச் சேர்ந்த எட்டு பாடசாலைகள் கலந்து கொண்டன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையுமத் பெற்ற பாடசாலைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவை பின்வருமாறு

முதலாம் இடம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி இரண்டாமிடம் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை மூன்றாமிடம் கந்தரோடை தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் பெற்றுள்ளன.

## களனி ஆற்றில் குதித்து இளைஞன் தற்கொலை

களனி பாலத்தில் இருந்து களனி கங்கையில் பாய்ந்து ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பகல் களனி கங்கையில் விழுந்த அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு மாலை வேளையில் மோதர பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களனி - கோனவல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

காதல் தோல்வியால் ஏற்பட்ட மன வேதனையில் குறித்த இளைஞன் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கிரேன்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேறகொண்டு வருகின்றனர்.

## மரண அறிவித்தல்



**திரு.சின்னத்தம்பி தனபாலசிங்கம்**

**பிராந்திய முகாமையாளர்**
**(வடக்கு மற்றும் கிழக்கு)**
**Commercial Credit PLC**

கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரி வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி தனபாலசிங்கம் நேற்று முன்தினம் (09.09.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் சின்னத்தம்பி, சின்னத்தம்பி மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், தீப்தகுமார் (UK) ராஜேஸ்குமார் (வல்வெட்டித்துறை நகர சபை), லலித்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.பாலேந்திரன், திருமதி ந.பாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ரி.உமையாள், திருமதி ஆர்.சுமங்கலி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

**விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## இன்றைய இராசி பலன் (11.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 26 ஆம் நாள்**
**செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : புநர்பூசம் பின்னிரவு 2.39 வரை அதன் பின் பூசம்
**திதி** : தசமி காலை 9.27 வரை. அதன் பின் ஏகாதசி
**சுபநேரம்** : 10.33 - 12.03
**இராகுகாலம்** : 3.03 - 4.33

**மேடம்** : காரிய சித்தி, பணப்புழக்கம், மன மகிழ்ச்சி
**இடபம்** : நற்செய்தி, வாக்கினால் இலாபம், பணவரவு
**மிதுனம்** : மனக்குறை, குடும்ப மனஸ்தாபம், யோசனை மிகுதி
**கடகம்** : ஜீவன கஷ்ரம், காலில் ரோகம், பிரயாண சிக்கல்
**சிங்கம்** : பொருள் இலாபம், சந்தோச மிகுதி, மூத்தோர் உதவி
**கன்னி** : பொருள் வரவு, தொழில் முயற்சி, மனக்கிலேசம்
**துலாம்** : பூமி இலாபம், பாக்கியம் சேரல், தந்தை வழி உதவி
**விருச்சிகம்** : மனக்கவலை, வீண் பிரச்சினை, மருத்துவச் செலவு
**தனுசு** : விவாக முயற்சி, விருந்துபசாரம், நண்பர் உதவி
**மகரம்** : ரோக பயம், கடன் பிரச்சினை, எதிரிகள் தொல்லை
**கும்பம்** : பொருள் சேர்க்கை, புத்திர சுகம், தெய்வ அனுகூலம்
**மீனம்** : காரியத் தடை, சகோதர சஞ்சலம், சிறுதூரப் பயணம்

**- ஜோதிடர் பாலஇரத்தினசேகர்**

வளிமண்டலவியல் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II இன் (ஆ) பிரிவின் தொலைத்தொடர்பு மற்றும் றேடார் அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப் பரீட்சை - 2012

## Open Competitive Examination for Recruitment to the post of Telecommunication and Radar Officer of the Sri Lanka Technological Service (Class II (B)) - 2012

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொலைத்தொடர்பு மற்றும் றேடார் அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கையரான ஆண்/ பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2.** பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

**3.** இந்தப் போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் 2012, நவெம்பர் மாதத்தில் கொழும்பு மத்திய நிலையத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

**4. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை.-** வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பதவிகளுக்கு அரச வர்த்தமானி அறிவித்தல் அல்லது பொது அறிவித்தல் ஊடாக விண்ணப்பம் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். அதில் விண்ணப்பதாரிகள் காட்டிய திறமைக்கு அமைய நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு பொது நிர்வாகச் சுற்றிக்கை 15/ 19 மற்றும் அது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கக் கூடிய பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைய இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II இன் **(ஆ)** பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

**5. கல்வி மற்றும் வேறு தகைமைகள் :**

**5.1 (அ)** அடிப்படைக் கல்வித் தகைமையாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

(i) பௌதீகவியல், தூயகணிதம் மற்றும் பிரயோக கணிதம் **அல்லது**

(ii) பௌதீகவியல், தூயகணிதம் அல்லது பிரயோககணிதம் அல்லது இணைந்த கணிதம் அத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒன்று :-

இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் இவற்றுடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**(ஆ)** ஆட்சேர்ப்பு செய்யும் தரமான வகுப்பு II இன் (ஆ) பிரிவிற்கு உட்சேர்த்துக் கொள்வதற்காக மேற்படி (அ) இல் குறிப்பிட்டுள்ள அடிப்படைக் கல்வித் தகைமைகளுடன் பின் குறிப்பிடப்படும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றை விண்ணப்பதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.-

**(i)** மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் ஹாடி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது

**(ii)** (தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அளிக்கும் அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியலாளர் கல்வி தேசிய டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது

**(iii)** உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது

**(iv)** திறந்த பல்கலைக்கழகத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது

**(v)** இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாவது பகுதி சித்திபெற்ற சான்றிதழ் (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) அல்லது

**(vi)** உயர் தொழில்நுட்ப தகைமைக்குச் சமமான இலங்கை தொழில்நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு தகைமைகள்

**5.2** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரியின் வயது 18 இற்குக் குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**5.3** விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

**5.4** விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கம் மற்றும் நல்ல உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**5.5** சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கையளிக்கப்படுவதற்கான கடைசி நாளன்று பதவிக்கு உரிய சகல தகைமைகளையும் கட்டாயமாக பூர்த்தி செய்துள்ளவராக இருத்தல் வேண்டும்.

**6.விண்ணப்பம் செய்யும் முறை.-** இந்த அறிவித்தலுடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய ஏ4 அளவிலான தாளில் ஒரு பக்கத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 4 **(உ)** வரை முதல் பக்கத்தில் உள்ளடக்கக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தனது கையால் நிரப்ப வேண்டும். உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் **2012.10.05 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு அஞ்சலில் "பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II இன் (ஆ) பிரிவின் தொலைத்தொடர்பு மற்றும் றேடார் அலுவலர் பதவி"** என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். தற்போதும் அரச/ மாகாண பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பம் அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தி கிடைக்கப் பெறும் அல்லது உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட மாட்டாது.

**7.** பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சை நேர அட்டவணை என்பன விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பதாரிகள் பரீட்சை மையத்தின் அதிபரிடம் கையொப்பம் உறுதிப் படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்த விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட்ட உடனேயே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அது தொடர்பாக செய்தித்தாள்களில் அறிவித்தல் செய்யும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகு அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லையானால், அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பதிவு அஞ்சல் செய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை கொழும்புப் பிரதேசத்துக்கு வெளியே இருப்பவர்களாயின் அனுமதி அட்டை அனுப்பிவைக்க வேண்டிய தொலைநகல் இலக்கத்தை யும் குறிப்பிட்டு கடிதமூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். அந்தக் கடிதத்தின் போட்டோப் பிரதியைத் தம்முடன் வைத்திருப்பது நல்லது.

**8.** எழுத்துப் பரீட்சையின்போது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பயணக் கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

**9.** இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்தல் வேண்டும் என்ற ஆரம்ப பணிப்பிற்கு ஏற்ப உரிய முறையில் விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுதல் விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கு உரிய தகைமையைப் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்படும் என்று கருத முடியாது. எழுத்துப் பரீட்சையில் அதிக திறமை காட்டிய விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு தகைமை இருக்கின்றதா என்று பரீட்சிக்கப்படும்போது உரிய தகைமை இல்லை என்று காணப்படின், அவ்வாறானவர்கள் நியமனம் பெற்றுக்கொள்வதற்கு தகைமையற்றவர்கள் என்று கருதப்படுவார்கள்.

**10.** இந்த அறிவித்தலில் வெளிப்படுத்தப்படாத காரணங்கள் தொடர்பாகவும் மற்றும் நியமனம் வழங்கல் பற்றியும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின்பால் உள்ளது.

**11.** விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி, பொலிஸ சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி, ரூபா 2,37,060 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண பொதுச் சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவரால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

**12. பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணமாக மீளப்பெற்றுக் கொள்ள முடியாத தொகை ரூபா 500 I வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு இலங்கை வங்கி, டொரின்டன் சதுக்கக் கிளையின் கணக்கு இல. 7042678 இல் வரவுவைக்கும்படி, எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப்பெற்ற பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் கழன்று விழாதவாறு ஒட்டி அனுப்பி வைக்க வேண்டும். காசோலை ஏற்றுக்கொள் ளப்பட மாட்டாது. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியை தம்வசம் வைத்திருப்பது நல்லது.

**13. எழுத்துப் பரீட்சை.-** இந்தப் போட்டிப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் ஊடாக நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பரீட்சையின்போது சகல வினாப்பத்திரங் களுககும் ஒரே மொழியில் விடை அளித்தல் வேண்டும். கீழே குறிப்பிட்டுள்ளவாறு, எழுத்துப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) நுண்ணமதிப் பரீட்சை

(2) தொழில்நுட்ப வினாப்பத்திரம்.

**14. பாடப் பரிந்துரை.-**

**(1) நுண்மதிப் பரீட்சை.-** (காலம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

விண்ணப்பதாரியிடம் காணப்படும் பகுத்தறிவு, பகுப்பாய்வுத் திறன், முடிவுஎடுத்தல் வல்லமை மற்றும் தீர்ப்பளித்தல் தொடர்பான வினாக்களின் சேர்க்கை.

**(2) தொழில்நுட்ப வினாப்பத்திரம்.-** (காலம் : 2 மணித்தியாலம்)- மொத்தப் புள்ளிகள் 100.

பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் (இலக்ட்ரோனிக்ஸ்) பாடம் தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் தரப்படும். பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் பாடங்களுக்கு உரிய பரீட்சை மட்டம் (க. பொ. த.) பொ. மின்சார அடிப்படைகள், அரைக் கடத்திகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், பல்வேறு தொடர்பாடல் மற்றும் தகவல் பரிவர்த்தனை திட்டம் தொடர்பானவை மற்றும் டிப்ளோமாக மட்ட வரையிலான இலத்திரனியல் மற்றும் தொலைத தொடர்பு பற்றிய விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சித்தல்.

**15.** தெரிவுசெய்யும் முறை.- தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து அதிக அளவான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளை நேர்முகத் தேர்வுக்கு அழைத்து தகைமைகள் பரிசீலனை செய்யப்படும் நேர்முகத் தேர்வுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமையை நிறைவுசெய்துள்ள மற்றும் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II (ஆ) தொகுதிக்கு நியமனம் வழங்கப்படும்.

**16. மருத்துவப் பரிசோதனை.-** தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தாம் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணி புரிவதற்கான உடல் நலத்தைக் கொண்டிருக்கின்றார் என்று உறுதிப் படுத்திக் கொள்வதற்காக தன்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். மருத்துவ பரிசோதனையில் உடல் தகுதிபெறத்ததவறிய விண்ணப்பதாரிகள் தகைமை அற்றவர்களாகக் கருதப்படுவர்.

**17. சம்பள அளவுத்திட்டம்.-** (6/ 2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN3-2006-V-சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய).

ரூ. 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 ரூ. 27

**பகுதி I** : தொகுதி (IIm) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - 2012.09.07

(ரூபா 15,545 சம்பளத்திற்கு உயர முன்னர் வினைத்திறமை சான்றிதழ் பெறவேண்டும்)

**18. சேவை உடன்படிக்கை :**

**18.1** இந்தப் பதவி நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்து உடையதாகும். 3 ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்படும் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் அவர்கள் விதவைகள், அனாதைகள்/ தாரமிழந்தவர் அனாதைகள் ஓய்வூதிய சம்பளத் திட்டத்துக்கு பங்களிப்பு நிதி வழங்க வேண்டும்.

**18.2** தெரிவுசெய்யப்படுபவர்கள் தாபனக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சேவைப் பிரமாண ஒழுங்குவிதிகள், திணைக்கள கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் ஏனைய கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

**18.3** அரச கரும மொழி அல்லாத வேறு மொழி ஊடாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்கள் நியமனம் பெற்ற திகதியில் இருந்து மூன்று (03) ஆண்டு காலத்துக்குள் அரச கரும மொழிப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தப் பரீட்சையில் சித்திபெறாதவர்கள் அடுத்து வரும் சம்பள உயர்ச்சியைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர்.

**18.4** நிரந்தர நியமனம் பெற்ற திகதியில் இருந்து 5 ஆண்டு காலத்துக்குள் 7/ 2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி தனது பதவிக்கு உரிய மட்டத்தில் இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் அத்தகைய தேர்ச்சிபெற முடியாது விட்டால், அத்தகைய தேர்ச்சி பெறும் வரை சம்பள உயர்ச்சி நிறுத்தி வைக்கப்படும்.

**18.5** 1589/ 30 ஆம் இலக்க பொதுச்சேவை ஆணையத்தின் பதவியணியினர் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைவானது.

**18.6** முக்கியமானது :

**(i)** கடமை நேரம் அனைவருக்கும் பொதுவான அலுவலக நேரம் அல்ல என்பதுடன் இர[illegible] பகல் இரண்டு வேளையும் மற்றும் சனி, ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில[illegible] கடமைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கடமைப் புத்தகத்துக்கு ஏற்ப கடமை புரிதல் வேண்டும்.

**(ii)** அவர்கள் தீவின் எந்தப் பிரதேசத்திலும் கடமை புரிய வேண்டும்.

**எஸ். எச். காரியவசம், பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம்.**
**வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, 2012.08.18.**

# மாதிரி விண்ணப்பப்படிவம்

**வளிமண்டலவியல் திணைக்களம்**

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II இன் (ஆ) பிரிவின் தொலைத்தொடர்பு மற்றும் றேடார் அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2012**

Open Competitive Examination for Recruitment to the post of Tele Communication and Radar Officer of the Sri Lanka Technological Service (class II(B)) - 2012

* பரீட்சைக்கு தோற்றும் மொழி :-
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4
(கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்)

1. **(அ)** முதலெழுத்து இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :..............................
உதாரணம் :- (SILVA, A. B. C.)
**(ஆ)** முதலெழுத்து இறுதியில் வருமாறு பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):
திரு./ திருமதி/ செல்வி :-..............................
**(இ)** முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :
..............................
**(ஈ)** முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெபிற்றல் எழுத்துக்களால் நிரப்ப வேண்டும்):..............................

2. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :..............................

3. பால் :-..............................(ஆண் - 0, பெண்-1)
(கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்)

4. நிரந்தர முகவரி :..............................
**(அ)** (சிங்களத்தில/ தமிழில்) :..............................
**(ஆ)** ஆங்கிலத்தில் :..............................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களால் நிரப்ப வேண்டும்)
(இந்த முகவரிக்கே அனுமதி அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.)
**(இ)** நிரந்தரமாக வதியும் மாவட்டம் :..............................
**(ஈ)** பிரதேச செயலாளர் பிரிவு :..............................
**(உ)** தங்களின் தொலைபேசி இலக்கம் :..............................

5. **(அ)** பிறந்த திகதி :..............................
ஆண்டு :.................. மாதம் :.................. திகதி :..................
**(ஆ)** 2012.10.05 ஆந் திகதியன்று வயது :..............................

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு அவதானம்! கிழக்கு மக்களை எச்சரிக்கிறார் சந்திரகாந்தன்

என்னை வீழ்த்த நினைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர் என கூறியுள்ள முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் கூட்டமைப்பு குறித்து அவதானமாக இருக்குமாறும் கிழக்கு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், "நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, என்னை எந்தவிதத்திலாவது தோற்கடிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு பல முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அப்படியிருந் தும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிகளவான வாக்குகளைப் பெற்று நான் வெற்றி பெற்றுள்ளேன்.

என்னை வெற்றி பெறச் செய்த மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அத்தோடு கிழக்கு மாகாணத்திலே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவு நல்கிய அனைவருக்கும் கிழக்கு மாகாணத்திலே வெற்றிலைச் சின்னத்திற்கு வாக்களித்த அனைவருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

தொடர்ந்து இதே போன்று பல இடர்பாடுகளை ஏற்படுத்தக் காத்திருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பில் கிழக்கு மக்கள் மிக்க அவதானமாக இருக்குமாறும் "கேட்டுக் கொண்டார்.

## ரயிலுடன் கார் மோதி விபத்து: நால்வர் படுகாயம்

அகந்தான - கிரியுல்ல - படகம பகுதி ரயில் கடவை ஒன்றில் கார் ஒன்று விபத்துக்குள்ளான-தில் நால்வர் படுகாயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ரயில் கடவையில் அபாய விளக்கு ஒளிரவிடப்பட்டிருந்த போதும் படகம வழியாக நீர்கொழும்பு வீதிக்குள் பயணிக்க முயற்சித்த கார், அவிசாவளை-யில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரினை பெண் ஒருவரே செலுத்திச் சென்றுள்ளார்.

காரில் குறித்த பெண்ணின் கணவர், தாய், மகள் மற்றும் சகோதரி ஆகியோர் பயணித்துள்ளனர்.

## இரசாயன திரவியங்களை ஏற்றிக்கொண்டு இலங்கை வந்த கப்பலில் தீ விபத்து !

### நீண்ட போராட்டத்தின் பின் தீ அணைப்பு

இலங்கைக்கு இரசாயன திரவியங்களை ஏற்றி வந்த கப்பல் ஒன்று இந்திய மும்பை கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் திடீர் தீ விபத்துக்கு உள்ளானது.

நேற்று முன்தினம் மாலையில் இரசாயனப் பொருட்களை ஏற்றி ஆம்ஸ்டர்டாம் பாலம் அருகே சென்றபோது சரக்கு கப்பலில் திடீர் தீ ஏற்பட்டுள்ளது.

பின்னர் தகவல் அறிந்து மும்பை கடலோரப்படை அதிகாரிகள் இரண்டு கப்பல்களில் வந்து மீட்பு பணியில் ஈடுபட்டன.

தீ விபத்து குறித்து நடந்த ஆய்வில் கப்பலின் இயந்திரப் பகுதி அருகே சத்தம் கேட்டதாக தெரியவந்தது. கப்பலின் மத்திய பகுதியிலும் தீ பற்றி இருந்தது. பின்னர் தீயணைக்கப்பட்டது. இக் கப்பல் இன்று கொழும்பை வந்தடையும் என எதிர்பாக்கப்படுகிறது.

## தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

### - பொலிஸ் தலைமையகம்

தேர்தல் நடைபெற்ற பகுதிகளிலுள்ள சகல பொலிஸ் பிரிவுகளிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் தேர்தல் விதிகள் மீறப்பட்ட பல சம்பவங்கள் குறித்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கேகாலை, அநுராதபுரம், மதவாச்சி பகுதிகளிலிருந்து சிறு முறைப்பாடுகள் பல கிடைத்ததாகவும் தேர்தல் பிரச்சாரங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இது வரை மொத்தமாக 97 முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் தேர்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 81 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தகைய சம்பவங்களை தடுக்குமாறும் தேர்தல் விதிகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென ஆதரவாளர்களை அறிவுறுத்துமாறும் அரசியல் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சுமார் 20,000 பொலிஸார் மற்றும் முப்படையி-னர், தேர்தலின் பின்னரான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## இளையோருக்கான மின் இணைப்பு பயிற்சி: ஒப்பந்தமும் கைச்சாத்து

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில் நுட்பக கல்வி பயிற்சித் திணைக்களம் இலங்கை மின்சாரசபையுடன் இணைந்து மேற்கொள்ளவுள்ள விசேட மின்னிணைப்பாளர் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பதற்காக ஏற்பாடு செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கடந்த 6ஆம் திகதி காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதான அதிதிக-ளாக இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, மின்வலு சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால்க்றேரோ ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

க.பொ.த சாதரண தரப்பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி பாடங்கள் உள்ளிட்ட 6 பாடங்களில் சித்தியடைந்த இளைஞர் யுவதிகளை இப்பயிற்சி நெறிகளுக்காக சேர்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அதில் தமிழ் மொழி மூலமாக 50 மாணவ மாணவிகளும் சிங்கள மொழி மூலமாக 450 மாணவ மாணவிகளும் சேர்க்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே. ஏ திலகரத்தின மற்றும் மின்சக்தி, வலுசக்தி அமைச்சின் செயலாளர் எம். என். சீ. பெர்டினான்டஸ் ஆகியோர்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

## குடும்பஸ்தர் தூக்கிட்ட நிலையில் சடலமாகமீட்பு

### கோண்டாவிலில் சம்பவம்

கோண்டாவில் பகுதியில் நேற்று அதிகாலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் 42 வயதுடைய இராஜகுரு என்பவரே அவரது வீட்டில் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இரவு 11 மணி வரை திரைப்படம் பார்த்துக்கொண்டு இருந்ததாகவும் பின்னர் தாம் நித்திரைக்கு சென்றபின்னர் இவர் வீட்டு வாசலில் இருந்ததாகவும் அதிகாலை இவரை காணாது தேடிய போது மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும் வீட்டில் உள்ளோர் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.



உடுவில் பிரதேச செலயக கலாசார விழா பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான மு. நந்தகோபாலன் தலைமையில இணுவில இளம் தொண்டர் சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டார் இணுவில் சந்தியில் இருந்து விருந்தினர்கள் பாரம்பரிய வாத்தியங்களான சங்கு, தாரை, தம்பட்டை, மேளம் நாதஸ்வரம் உடுக்கைகளுடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் நிகழ்வு விளக்கு ஏற்றி ஆரம்பித்துவைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படம்: வலிகாமம் நிருபர்)

## காலம் கடந்த முறைப்பாடுகள்

வலிகாமம்

யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் பல்வேறு பாலியல் பலாத்கார நிகழ்வுகள் இடம் பெறுகின்ற போதிலும் இத்தகைய நிகழ்வுகள் காலம் கடந்த பின்னரே தெரிய வருகின்றன. குறிப்பாக வைத்திய சாலைகளில் வேறு நோய்களுக்கு மருத்துவ சிகிச்சைக்குச்செல்லும் வேளையில் இவைகள் தெரிய வந்து முறைப்பாடுகளை செய்யும் நிகழ்வுகளே அதிக மாகக் காணப்படுகின்றன.

இத்தகைய ஆறு சம்பவங்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த சம்பவங்கள் யாவும் சுமார் ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் பதிவு செய்யப்பட்டுள ளன.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

# மறிச்சுக்கட்டி முஸ்லிம் மக்களின் வீடுகளை எரித்தவர்களைத் தண்டிக்கவும்

மன்னார், மறிச்சுக்கட்டி, மரைக்கார் நகர் கிராமத்தில் மீள்குடி யேறிய முஸ்லிம் மக்களின் குடிசைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இந்தத் தீவைப்புப் சம்ப வம் இடம்பெற்றிருக்கிறது. இதனால் சுமார் 21 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்து நிர்க்கதியாகியுள்ளன என்றும் தெரிவிக் கப்படுகிறது. இனந்தெரியாதவர்கள் எரித்தனரென்று சிலர் சொல்கி றார்கள். சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட கடற்படையினர் இந்தத் தற்காலிக குடியிருப்புகளை உடைத்துச் சேதப்படுத்தியதோடு, குடி யிருப்புகளுக்கும் தீ வைத்தனரென்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார். மீள்குடியேறிய இந்த முஸ்லிம்களுக்கு வீடுகளை நிர்மாணிப்ப தற்கான ஒப்பந்தத்தைப் பெற்றவரே இந்தத் தற்காலிக குடியிருப்பு களுக்குத் தீ வைத்தாரென்று கடற்படைக் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட தரப்பினர் கடற்ப டையினர் மீது குற்றம் சுமத்த முனைகின்றனர் என்றும், கடற்படையி னர்தான் தீயை அணைத்தனரென்றும் கடற்படைப் பேச்சாளர் தெரி வித்தார்.

இதில் உண்மையான குற்றவாளிகள் யாரென்பது கொடிய தீநாக் குகளுக்குத் தம் குடிசைகளைப் பறிகொடுத்து, மனம் கருகி நிற்கும் அந்த அப்பாவி முஸ்லிம் மக்களுக்குத்தான் புரியும். ஆயுததாரிகள் யாராக இருந்தாலும் அப்பாவிகளின் வாழ்விடங்களுக்குத் தீ வைத்த சம்பவங்கள் எத்தனையோ இந்த நாட்டில் இடம்பெற்றிருக்கின்றன. வேலியே பயிரை மேய்ந்த சம்பவங்கள் ஒன்றும் இந்த நாட்டில் இடம்பெறாத காரியங்களல்ல. வேலிகளும் பயிரை மேய்ந்திருக் கின்றன. அப்பாவித் தமிழ் மக்களின் வேலிகளாகத் தங்களைத் தாங்களே பிரகடனப்படுத்திக் கொண்டவர்களும் தமிழ் மக்களை வேட்டையாடி இருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் தானைத் தலைவர்களெனத் தமக்குத் தாமே நாமகரணம் சூட்டிக் கொண்டவர்களால், தமிழையே தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து மிரட்டி, விரட்டப்பட்டார்கள். சுமார் எழுபத்தியெட்டாயிரம் முஸ்லிம்கள் விரட் டப்பட்டார்கள். கிட்டத்தட்ட இருபது வருடங்களாகத் தமது தாய் மண்ணுக்குத் திரும்ப முடியாமல், வடக்கிற்கு வெளியே ஏனைய பகுதிகளில் அகதிகளாகத்தான் இந்த முஸ்லிம் சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவலங்களின் சுமைதாங்கிகளாகிப் போன இவர்கள் புத்தளம், குருநாகல், அனுராதபுரம் உட்படப் பல பகுதி களில் பரந்து வாழ்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட தற்காலிக முகாம்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் தாய் மண்ணில் காலங்காலமாக வசித்து வந்த குடியிருப்புகளை யுத்தம் காவு கொண்டிருக்கிறது. அவர்களின் விவ சாய நிலங்களும், குடியிருப்புகளும் அபகரிக்கப்பட்டும் இருக்கின் றன. இருபது வருடங்களுக்கு முன்னர் விரட்டப்பட்ட இவர்களில் பலர் வடக்குக்கு வெளியேயுள்ள பல பிரதேசங்களில் வேரூன்றி விட்டார்கள். யுத்தம் முடிந்தபின் சொந்த மண்ணுக்குத் திரும்பிய முஸ்லிம் சகோதரர்கள் பலர் இங்கு வாழ முடியாத சூழ்நிலைகளால் தாம் தஞ்சம் தேடிய பகுதிகளுக்கே திரும்பிக் சென்றிருக்கிறார்கள்.

இவ்வாறான ஒரு சூழலில்தான் மறிச்சுக்கட்டி, மரைக்காயர் நகர் முஸ்லிம் மக்களும் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக்குடியமர வந்தார்கள். இழப்பதற்குத் துயரங்களைத் தவிர எதுவுமில்லாத இந்த மக்களின் குடியிருப்புகளுக்குத் தீ மூட்டியவர்கள் யார்? கடற் படையினரா? வீடுகளை நிர்மாணிக்க ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொண்ட நபரின் கையாட்களா? யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் இவ்வாறான வன்செயல் சம்பவங்கள்தான் இனங்க ளுக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தக் காரணமாக அமைந தன. அதுவே யுத்தமாகப் பரிணாமம் பெற்று அனைத்து இனங்க ளையும் சார்ந்த அப்பாவி மக்களைப் பலியெடுத்திருக்கிறது. இவ்வா றான சிறு பொறிகள்தான் இந்த நாட்டையே எரித்த பெருநெருப் பாகக் குரூர வடிவமெடுத்தது. சம்பவம் நடைபெற்ற உடனேயே சம்பந்தப்பட்ட பகுதிக்குப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டமை பாராட்டுக்குரியது. கடற்படையினர்தான் இந்தக் குரூர சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்றால் உரிய விசாரணை நடத்திக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கூட்டமைப்பு எம்.பீ. செல்வம் அடைக்கலநாதன் கூறுவதை யெல்லாம் தேவ வாக்காக எடுத்துக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது. கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களை வடக்கி லிருந்து விரட்டியவர்களின் ஊதுகுழலாக இருந்தவர் அவர். அதற் காக அவர் தெரிவிக்கும் குற்றச்சாட்டினை கிடப்பில் போட வேண் டிய தேவை கிடையாது. யார் குற்றவாளிகள் என்பது கண்டறியப்ப ட்டுக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இல்லையேல் இவ்வாறான அக்கிரமங்கள் இனியும் இடம்பெறும். இல்லையேல் சட்டத்தையும், ஒழுங்கையும் ஏற்படுத்த வேண்டியவர்களே, இலங்கையை இனியும் எரிக்கப் போகும் அனுமார்களுக்கு லைசென்ஸ் வழங்கியது போலாகிவிடும்.

இந்தக் கொடூரம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப் பட்டதாகத் தகவல் இல்லை. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டியவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கக்கூடாது. அதிகாரத் தரப்பு அமைதியாகிப் போனால் அக்கிரமக்காரர்கள் சன்னதம் கொண்டு ஆடுவார்கள். தீ வைத்தவர்கள் நீதிக்கு முன் னால் நிறுத்தப்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# – சமஷ்டி எண்ணக்கரு –

கடந்த தசாப்தத்தில், சமஷ்டி என்ற எண்ணக்கரு பற்றி ஆழ்ந்ததொரு புத்தெழுச்சி ஏற்பட்டுள்ளது. சமஷ்டிவாதம் என்ற பதம், விவாதத்தையும் விளக்கத்தையும் வரையறுக்கும் தன்மையைப் பெற்றுள்ளது. இறைமை அதிகாரத்தைக் கலைத்தலை இது குறிப்பது போலிருப்பதால், ஸ்பெயினில் மத்திய அரசாங்கம் இப்பதத் தைப் பயன்படுத்தத் தயங்கு கின்றது. எதிர்மாறாக போராடும் கட்டலோனியர்களின் பார்வை யில், சுய ஆட்சிக்கான தனித்தன்மை வாய்ந்த தமது கோரிக்கையைப் போதிய அளவு பிரதி- பலிக்கவில்லை என்று, கட்டலோனியர்கள் அப்பதத்தைப் பயன்படுத்துவதில்லை. இனவொதுக்கல் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான அங்கீ காரம் அதற்குக் கிடைத்ததால், தென் ஆபிரிக்காவில், இச்சொல் அபகீர்த்திக்குள்ளாகியது. அதேபோல, "ஒரு தென் ஆபிரிக்கா" என்ற ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் நோக்கு, புதிய அரசியல் யாப்பை சமஷ்டி என்ற வர்ணிப்பதிலிருந்து பின் வாங்கச் செய்தது.

இவை புதிய விவாதங்கள் என்பதற்கில்லை: மத்தியமயப்ப டுத்தும் சக்திகள் சமஷ்டி என்ற சொல்லை விரும்பவில்லை என்று முடிவு செய்ததால், அமெரிக்க அரசியலிலுள்ள ஜெ.் ப்பர் ஸோனியப் பாரம்பரி யத்தினர் "சமஷ்டிக்கு எதிரா னோர்" என்று தம்மை அழைப்பதில் பெருமையடைந் தனர்.

தென் ஆபிரிக்கா, ஸ்பெயின், மெக்ஸிக்கோ, ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, பிரேசில், இந்தியா, பாகிஸ்தான், சைப்பிரஸ், ஈராக், இலங்கை இவை ஒரு சில நாடுகளே. என்பவற்றில் இன்று நடப்பவை நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய சில பொதுவான போக்குகளின் பிரதிபலிப்புகளாகும். ஒரு சமஷ்டி ஆட்சிவாதியாக இருப்பதற்கு நிச்சயமாக ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் உள்ளன. பொதுவான கருத்தே முக்கியம்.

நவீன சமஷ்டி எண்ணக்கரு, முதலில் ஒரு ஜனநாயக எண்ணக்கருவாகும் அது. மக்களின் அடையாளங்களுக்கும், அவர்களுடைய அரசியல் தெரிவுகளுக்கும் ஒரு மரியாதையைக் குறிக்கின்றது. அது தனி ஆள் உரிமைகள், அரசியல் யாப்புச் செயற்பாடு, சட்ட ஆட்சி என்பனவற்றிற்கு மரியாதை என்பதை அடிப்படையாகக் கொள்ளாத ஜனநாயகம் பற்றிய எண்ணக் கருக்களுக்கு முரண்பட்டவையாகும். மக்களின் உண்மையான அல்லது மிகச் சிறந்த அக்கறைகளுக்குத் தம்மிடமே வழி உள்ளது என்ற நம்பும் சமுதாயத்தில் உள்ளோருக்கும் இது எதிரானது. அரசியல் உண்மை பற்றிய அறிவை வெளியீடும் சித்தாந்தங்கள் (அல்லது உலகில் வெளிக்காட்டப்பட்டுள்ள சமய உண்மைகள்) சமஷ்டி ஆட்சி எண்ணக்கருவின் தளர்த்தப்பட முடியாத விரோதிகளாகும்.

எனவே, அரசியலின் முக்கியத்துவத்தையும் பொது மக்களின் ஆர்வங்களின் எதிரெ- திரான கருத்தக்களையும் சமஷ்டி ஆட்சி என்ற எண்ணக் கரு விளங்கிக் கொள்கின்றது. அரசாங்கத்தின் கருத்தை வரையறுத்தல் பற்றிய பொதுவானதொரு கவலை பற்றியும் அது பேசுகின்றது.

**சமக்ஷ்டி எண்ணக்கரு தலைதூக்குவதற்கு அடிப்படையில் பல்வேறு காரணங்களுண்டு. ஜனநாயக விழுமியங்களின் முக்கியத்துவம். அடையாளம். மனித உரிமைகள் பற்றிய அரசி யலில் ஏற்பட்ட புரட்சிகள். இனவொதுக்கல். பணித்துறைப் பொதுவுடைமை என்பவற்றின் வீழ்ச்சி. தொழிநுட்பப் புரட்சியின் தாக்கம். உலகமயமாக்கல் என்ற பதத்துடன் நாம் தொடஉபுபடுத்தும் பொருளாதார மாற்றங்கள் என்பவை எல்லாம். தமது பங்களிப்பினைச் செய்துள்ளன.**

அரசாங்கத்தின் எந்த மட்டம், எதைச் செய்ய முடியும் என்பதை விதிக்கும் அரசியல் யாப்புக்கள், பின்னர் உரிமைக ளுக்கும் சுதந்திரங்களுக்கும் உத்தரவாதத்தையும் கொடுக்கும். அரசியல் யாப்புக்கள், இச்சமநி லையை விளக்கும் வலலமை யுள்ள நீதிமன்றக் கட்டமைப் பையும் கொண்டிருந்து அவ் விளக்கத்தைச் செயற்படுத்து வதற்கும் ஆற்றல் பெற்றிருந் தால், அவை இறைமை பற்றிய வரையறைகளையும் குழு உரிமைகளையும் தனி ஆள் உரிமைகளையும் பற்றியவை யாகவே கண்டிப்பாக அமையும்.

சமஷ்டி என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்தும் அம்சத்திற்கு இக்கருத்துக்கள் அடிப்படையானவையாகும். ஆதாவது அதிகாரம் உடனடியா- கப் பிரிக்கப்பட்டு ஒருங்கிணைப் புச் செய்யப்படுவதே ஒரு சமஷ் ஆட்சி நாடாகும்: இதுவே, சமஷ்டியில் காணப்படும் மைய நிலையாகும். அது வெறுமனே "ஒரு கருத்து" அல்ல. சில விடயங்ளைத் தனியாகவும் வேறு சிலவற்றைக் கூட்டாகவும் செய்வதற்கான ஒரு பொதுவான இணக்கப்பாட்டை இது குறிக்கின்றது. இது வெறுமனே அதிகாரப் பரலலாக்கம் அல்ல. ஏனெனில், மாநில அல்லது மாகாண அரசுகள் தேசிய அல்லது சமஷ்டி அரசாங்கங்கள் பெற்றுள்ள அளவு இறைமை யைத் தமது தளங்களில் பெற்றுள்ளன. உயர்ந்த அல்லது தாழ்ந்த அரசாங்கங்கள் இல்லை. சிரேஷ்ட அல்லது கனிஷ்ட அரசாங்கங்கள் இல்லை. பொதுவானதொரு சட்டகத்தினுள் வித்தியாசமான அரசாங்கங்கள் வெவ்வேறு விடயங்களில் ஈடுபடுகின்றன. அதேவேளை நேரிய அரசாங்கம் மாகாணங் களினால் சில பணிகளைச் செய்வதற்காக அதிகாரங்கள் கையளிக்கபட்ட ஒரு பிராணி அல்ல. அதற்குத் தனக்கே சொந்தமான இறைமை உண்டு. அதற்குத் தனக்கே உரித்தான மக்களுடனான தொடர்பும் உண்டு.

எனவே சமஷ்டி என்ற எண்ணக்கரு முடிவின்றி நடை- பெற்றுக்கொண்டிருக்கும். எவர் எதைச் செய்வது என்பது பற்றிய உரையாடலைக் குறிக்கும். நிதிப் பிரச்சினைகள், பணம் எவ்வாறு ஈட்டப்படுகிறது, அது எவ்வாறு பகிரப்படுகிறது. அது எப்படிச் செலவிடப்படுகிறது என்பன பற்றி ஒவ்வொரு சமஷ்டி ஆட்சியிலும் பிரதான பிரச்சி னைகள் உண்டு. கனடாவில், வளங்கள் மகாணங்களின் உடமைகளாகும். இவற்றிலிருந்து பெறப்படும் நன்மைகள், பல்வேறு மாகாண அரசாங்கங்களுக்கும் பாயும். நைஜீரியாவில், முழு எண்ணெய் வருமானத்தையும் மத்திய அரசாங்கமே பெறும். அதன் பின்னர் ஒரு சூத்திரத்திற்கிணங்க அதைப் பிரிக்கும். அவுஸ்திரேலியாவில் வருமானத்தைப் பகிர்ந்து கொள்ளும் சூத்திரம் அந்தள வுக்குச் சிக்கார்ந் ததாக இருக்கின்றது.

உள்ளூர் அரசாங் கங்களும் மாநில அரசாங்கங்களும் தத்தமது சொந்த நிகழ்ச்சித் திட்டங களுக்கு அவசி யப்படும் பணத்தைத் தாமே திரட்டிக் கொள்ள வேண்டு மென்பது பற்றிய கருத்தொருமைப்பாடு வளர்ந்து கொண்டிருக்கின்றது. இது திறந்த தன்மையையும் பொறுப்புக் கூறவேண்டிய நிலையையும் அதிகரிக்கின்றது. இது சாத்தியப்படாத சந்தர்ப் பங்களில் மத்திய வருமானப் பகிர்வு மேலும் தெளிவாகவும் ஓர் சாரான தன்மை குறைவா கவும் இருத்தல் வேண்டும். இது நிகழாவிட்டல், பெரும்பாலும் நிகழ்வதில்லை. அது தவிர்க்க முடியாத மோதல்களுக்கு வழி வகுக்கும். சமஷ்டியை எதிர்ப்பவர்கள் இம்மோதல் களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். சில சமயங்களில் தடுமாறச் செய்யும் சமஷ்டி ஆடசி நிறுவ- னங்களின் சிக்கார்ந்த தன்மையும். பல அரசாங்கங் களுக்கு ஏற்படுவதாகக் கூறப்படும் செலவும். பிராந்திய அரசாங்கங்கள் முற்றாகவே ஒழித்துவிட வேண்டுமென்பதை நியாயப்படுத்துவதற்கு அல்லது பிரிவினையை நியாயப்படுத்து வதற்கு எடுத்துக் காட்டப்படு கின்றன. சமஷ்டி ஏற்பாடுகளுக்கு மிகச் சிறிய என்று கருத்பபடச் கூடிய நாடுகளில் அதனால் ஏற்படக்கூடிய செலவுகளைக் காட்டி, பெரும்பான்மையினராக உள்ள இவர்கள் சமஷ்டி ஆட்சியை எதிர்த்து வந்துள் ளனர். உறுதிபூண்டுள்ள சிறுபான்மையினர் சுயநிர்ணய உரிமை கட்டாயமென்றம், தனி அரசுகளின் எளிமையான தன்மையைப் பார்க்கும்பொழுது, சமஷ்டி ஆட்சியின் பெரும் சிக்கார்ந்த தன்மை தெளிவாகு மென்றும் வாதாடுவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

சமஷ்டி எண்ணக்கரு என்பது, உண்மையில் விடயங்களின் சிக்கார்ந்த தன்மைகள் பற்றியதாகும். ஆனாலும் இது முடிவற்ற பேச்சுவார்த்தைகளின் கொடுத்து வாங்கும் செயன் முறையாகும். எப்படியிருப்பினும், வாழ்க்கையின் பெரும் பகுதி இவ்வாறுதான் அமைகின்றது. எத்தகைய பன்மைத்துவமும் பற்றிப் பிரச்சினைகளைக் கொண்டிருக்கும்.

உதாரணமாக மெக்ஸிக் கோவில் 20ஆம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் நிலவிய ஒரு கட்சி ஆட்சியின்போது, அரசியல் யாப்பு, நாட்டின் சமஷ்டி ஆட்சி இயல்பைப் பற்றிப் பேசிய போதிலும் உண்மை என்னவோ, மிக வித்தியசமாகவே உள்ளது. இதே நிலைமை, சோவியத் ஒன்றியத்தைப் பொறுத்தளவில் மேலும் உண்மையாகும்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# முதியவர்களின் சேவை இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டும்

மருதனார்மடம்

"முதியவர்களும் கிராமத்திற்கு சேவை செய்தவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்று இளைஞர்களின் பொதுச் சேவைகள் அருகிவருகின்றன. இந்த நிலையில் முதிய சேவையாளர்களைக் கௌரவிக்கும் இதுபோன்ற விழாக்கள் இளைஞர்களுக்கு உத்வேகத்தைக் கொடுப்பதாக அமையும்" இவ்வாறு கிராம வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய சின்னையா வைத்திலிங்கம் (பாட்டப்பா), தம்பு இராமநாதன் (சைவப்பா) ஆகியோரை கௌரவிக் கும் வகையில் சிறுப்பிட்டி இணையத்தினர் நடத்திய விழாவில் பிரதம விருந்தினரா கலந்துகொண்டு பேசிய வலிகிழக்கு பிரதேச செயலர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

செ. கந்தையா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது சேவையாளர்கள் இருவரும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப் பட்டதுடன், சுவிஸ் நாட்டில் வாழும் சிறுப்பிட்டி கிராம இளைஞர்களது அன்பளிப்பாக இருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதியுதவியும் வழங்கப்பட்டது.

இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற கிராம சேவை அலுவலர் க. ஸ்ரீஸ்கந்தராசா "கௌரவிக்கப்படும் இருவரும் வெவ்வேறு துறைகளில் கிராமத்தை முன்னேற்றியிருப்பதை என் றென்றும் மறக்க முடியாது" என்றார். கிராமசேவை அலுவலர் ஐ. சிவானந்தன், சமுர்த்தி அலுவலர் எஸ். கருணாகரன் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். மிலாசினி ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.(01)



## கழுகுக் கண்கள்

கடந்த சனிக்கிழமை காலையில் இருந்து மாலைப் பொழுது வரை பறந்து அங்கு வன்முறைகள் இடம்பெறுகின்றனவா என்று அவதானித்தேன், என்னால் ஒரு வன்முறையைக் கூட அவதானிக்கமுடியவில்லை. இதற்கு காரணம் தற்போதைய தேர்தல் ஆணையாளரின் சிறந்த நிர்வாகமே ஆகும்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 3 மாகாண சபைகளின் தேர்தல் ஓரிரு சிறு சச்சரவுகள் மாத்திரம் இடம் பெற்றன மிகவும் அமைதியான தேர்தலாக அமைந்திருந்தது. அரசியல் அரங்கில் மும்முனைப் போட்டியாக அமையக்கூடிய ஒரு தேர்தலாக இது அமையுமென்றும் அரசியல் கட்சிகளிடையே இருந்துவரும் பலத்த போட்டியின் நிமித்தம் வன்முறைகள் அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறாக கிழக்கு மாகாண, வடமத்திய மாகாண, சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்கள் ஆகக் குறைந்த வன்முறைகளுடன் அமைதியான முறையில் நடந்து முடிந்தது. விருப்பு வாக்குகளை பெறுவதற்காக ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கிடையில் முன்பு இடம்பெற்றது போன்ற கைகலப்புக்களோ, கருத்து மோதல்களோ பலத்த வன்முறைகளோ இடம்பெறவில்லை.

ஜனாதிபதி அவர்களின் பணிப்புரையின் கீழ் இம் மூன்று மாகாணங்களிலும் பலத்த பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஆயுதப் படை வீரர்களின் பாதுகாப்பு அதிகமாக வழங்கப் பட்டதும் இந்த தடவை வன்முறைகள் இன்றி தேர்தல் நடந்து முடிவதற்கு பிரதான காரமாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வாண்டில் தேர்தல்களை நடத்துவதற்கு புதிதாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, மண் வாசனை உடைய ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மனிதராக இருந்தாலும் சட்டத்தை சரியான முறையில் கடைப்பிடிக்கும் ஒரு சிறந்த நிர்வாகியாக இருந்தமையினால் தான் இந்த தடவை தேர்தல் வன்முறைகள் இன்றி அமைதியாக நடை பெற்றது.

புதிய தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய செல்வாக்கு, அரசியல் அதிகாரம் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் செல்வ செருக்கோடு வாழும் ஒரு மனிதனையும் பரம ஏழையையும் ஒரே அளவுகோலை வைத்து இவ்விருவரும் கேட்கும் உதவிகள் சட்டப்பூர்வமாகவும், நியாயமாகவும் இருந்தால் அவற்றை ஒரே நொடியில் செய்து முடிக்கும் ஒரு நேர்மையான நிர்வாகியாக இருக்கிறார்.

தேர்தல் திணைக்களத்தில் கடந்த 28 வருடங்களாக பணிபுரிந்துவரும் தி.மஹிந்த தேசப்பிரிய இப்பதவியை வகித்த பெருமைக்குரிய திரு.பீலிக்ஸ் டயஸ் அபேயசிங்க, திரு.தயானந்த திஸாநாயக்க ஆகியோரைப் போன்று சூட்டும், கோட்டும் அணிந்து மேற்கத்திய நாகரீகத்தில் அபிமானம் கொண்ட ஒரு மனிதரல்ல. இவர் தாடியையும், மீசையையும் வளர்த்து எப்போதும் சாதாரண உடையில் தனது பணிகளை நிறைவேற்றி வருகிறார். இந்த மனிதனை வெளியில் பார்ப்பவர்கள் இவர்தான் இலங்கையின் தேர்தல் ஆணையாளர் என்று நினைக்கவே மாட்டார்கள். அந்தளவுக்கு திரு.மஹிந்த தேசப்பிரிய ஒரு சாதாரண மனிதராக வாழ்ந்து கொண்டி ருக்கிறார்.

இதுவே திரு.மஹிந்த தேசப்பிரிய தேர்தல் ஆணையாளராக பொறுப்பேற்று நடத்திய முதலாவது பிரதான தேர்தலாகும். இவர் எல்லோரிடமும் அன்பாக பழகும் நற்பண்பாளராக இருந்தாலும் கடமை நேரத்தில் கண்டிப்பான அரச அதிகாரியாக இருக்கிறார்.

இவரது கோரிக்கைகளை ஏற்று இந்த மூன்று மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் சட்டத்தை மீறுவதை கூடியவரையில் தவிர்த்துக் கொண்டமை ஒரு பாராட்டுக்குரிய விடயமாகும்.

பாடசாலைக்கு அருகில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த வேண்டாம். வீடு வீடாக வாக்கு வேட்டையில் வேட்பாளர்கள் செல்லும்போது அவர்களுடன் ஆதரவாளர்கள் கூட்டடமாக செல்லலாகாது. வேட்பாளர்களின் தேர்தல் சின்னம், இலக்கம் ஆகியவற்றைக் கொண்ட சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்ட வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் விதித்த கண்டிப்பான வேண்டுகோள்களையும் அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் கூடிய வரை யில் ஏற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தேர்தல் நடைபெறும் இடங்களில் ஏதாவது வாக்கு மோசடிகள் போன்ற குற்றச்சாட்டுகள் இடம்பெற்றதாக தமக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவர் உடனடியாக தனது உதவியாளர்களை ஸ்தலத்திற்கு அனுப்பிவைத்து விசாரணை செய்து அவற்றுக்கு தீர்க்கமான தீர்வுகளையும் எடுத்தார். இவ்விதம் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் நல்லவராக இருக்கும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் முதலாவது முயற்சி வன்முறையற்ற ஒரு அமைதியான தேர்தலை நடத்தி முடித்த ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தத் தடவை தேர்தல் ஆணையாளர் கட்சி சார்பற்ற முறையில் நடுநிலையுடன் தமது பணியை சிறப்பாக நிறைவேற்றினார் என்று இந்தத் தேர்தலில் போட்டியிட்ட சகல அரசியல் கட்சிகளும், சுயேட்சை குழுக்களும் தேர்தல் ஆணையாளரை முகமலர்ந்து பாராட்டியுள்ளன.

இலங்கையின் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க, தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இந்தத் தேர்தலை பக்கச் சார்பற்ற முறையில் சிறந்த முறையில் மூன்று மாகாணங் களிலும் செய்து முடித்தார் என்று பாராட்டுத் தெரிவித்தார்.

மஹிந்த தேசப்பிரிய போன்ற தேர்தல் ஆணையாளர்கள் நாட்டுக்கு தேவை. அவர்களின் சிறந்த நடுநிலையான பக்கச் சார்பற்ற முறையில் தேர்தல்களை நிர்வகிக்கும் திறமையினால் எங்கள் நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்குகிறது.

கழுகுக் கண்கள் புதிய தேர்தல் ஆணையாளருக்கு பாராட்டுகிறது.

## சமஷ்டி எண்ணக்கரு...

(7ஆம் பக்கம் பார்க்க)

சமஷ்டி என்ற எண்ணக்கரு மற்றுமொரு போக்கின் ஒரு பகுதியாகவும் அமைகின்றது. 1950களில் தோன்றிய ஐரோப்பிய ஒத்துழைப்பு' என்ற எண்ணம், இன்று தெரிவு செய்யப்பட்ட ஓர் ஐரோப்பியப் பாராளுமன்றம், பொது நீதிமன்றம், இயங்கும் சுதந்திரம், சுதந்திரமான வியாபாரம், பொதுவான ஒரு நாணயம் என்பவற்றிற்கு வழிவகுத்துள்ளது.

தேசியத்திற்கும் மேற்பட்ட சமஷ்டியில் ஆரம்பிக்கும் சொல் பற்றிப் பரந்த உளறல்கள் இருந்துபோதிலும் இன்று, உண்மையாகிவிட்டது. தேசிய இறைமை இறந்து விடவில்லை, தேசிய அரசு என்ற யுகம் முடிந்து விடவில்லை. ஆனால் இவை, தனித்துவமானவை அல்ல. சமலதையும் உள்ளடக்குபவை என்ற எண்ணம் ஒவ்வாததாகிவிட்டது.

நாடுகளுக்குள், ஆட்சி முறை தொடர்பான பழக்க வழக்கங்கள், உலக அரசியல், பொருளாதார அபிப்பிராயங்களின் ஆய்வுக்குக் கண்டிப்பாக உட்படுகின்றன. சட்ட ஆட்சி தொடர்பாக இது மிகவும் முக்கியமாகின்றது.

(சமஷ்டி ஆட்சிகளின் மன்றத்தின் தலைவரான பொப்ரேயின் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி)

## திறந்த போட்டிப் பரீட்சை...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்கள் :.................... மாதங்கள் :.................... நாட்கள் :....................

6. திருமணமானவர்/ திருமணமாகாதவர் :....................
(திருமணமானவர் - 1, திருமணமாகாதவர் - 2) (கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்)

7. இனம் :....................
சிங்களவர் - 1, தமிழர் - 2, வேறு - 3
(கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்)

8. கல்வித் தகைமை :....................
(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :....................
முதல் தடவை இரண்டாம் தடவை
ஆண்டு :.................... ஆண்டு :....................
பரீட்சை எண் :.................... பரீட்சை எண் :....................
பாடம் சித்தி பாடம் சித்தி
(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :....................
ஆண்டு :.................... ஆண்டு :....................
பரீட்சை எண் :.................... பரீட்சை எண் :....................
பாடம் சித்தி பாடம் சித்தி

9. தொழில் தகைமை/ தொழில்நுட்ப தகைமை :....................
9.1 பெற்றுள்ள பட்டம்/ டிப்ளோமா :....................
9.2 குறிப்பிட்ட பட்டம்/ டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர்:
....................
9.3 குறிப்பிட்ட பட்டம்/ டிப்ளோமா செல்லுப்டியாகும் திகதி :....................

10. வேறு தகைமைகள் :....................

11. தாங்கள் ஏதேனும் குற்றம் தொடர்பில் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருக்கிறீர்களா?
ஆம்/ இல்லை :....................
11.1 ஆம் எனில், விபரத்தைக் குறிப்பிடவும் :....................

12. விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் தொழில் புரிபவரானால் பதவியின் பெயர், சேவை செய்யும் திணைக்களத்தின் பெயர் மற்றும், முகவரி
:....................

13. விணைப்பதாரி இதற்கு முன்பு அரச/ மாகாண அரச சேவையில் கடமை புரிந்தபின் விலகியிருந்தால் அவ்வாறு விலகியதற்கான காரணம்:....................
....................

4. பரீட்சைக் கூட்டணம் செலுத்தியமை பற்றிய விபரம் :....................
14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி :....................
14.2 பற்றுச்சீட்டின் இலக்கம் :....................
14.3 பணம் செலுத்திய திகதி :....................
(பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழன்றுவிடாதபடி இங்கே ஒட்டவும்.)

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப சரியானவை மற்றும் உண்மையானவை என்று வெளிப்படுத்துகின்றேன். இந்த பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய நான் தகுதியற்றவன் என்று காணப்பட்டால் விண்ணப்பதாரித் தன்மைய்ய வலிதற்றதாக்கப்படும் அல்லது நியமனத்துக்குப் பின்னர் தெரியவரின் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நானறிவேன். மேலும், இந்த பரீட்சை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எடுக்கும் தீர்மானத்துக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

....................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.
திகதி :....................

16. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்.-
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................... .................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் .................... ஆம் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் சான்றுபடுத்துகின்றேன்.

...................., ....................,
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை மாதிரிக் கையொப்பம். சான்றளிக்கும், அலுவலரின் கையொப்பம்.
சான்றுபடுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :....................
பதவி :....................
முகவரி :....................
திகதி :....................

(அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் தற்போது தொழில் புரியும் விண்ணப்பதாரியானால் கீழ்வரும் சான்றளிப்பை திணைக்களத்தின் தலைவர் செய்ய வேண்டும்.) அரச அல்லது மாகாண அரச சேவை திணைக்களத் தலைவரின் சான்றளிப்பு
:....................

மேலே தகவல் வழங்கியிருக்கும் திரு./ திருமதி/ செல்வி .................... என்பவர் இவ்வலுவலகத்தில் சேவை புரிகின்றார் என்றும் அவர் .................... ஆக .................... ஆம் திகதி முதல் பதவியில் கடமை புரிகின்றார் என்றும் அவரின் சேவை திருப்திகரமானது என்றும் இந்தப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் அவர் நியமனத்துக்கு தெரிவுசெய்யப் பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/ படமாட்டார் என்றும் மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

....................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :....................
பதவி :....................
விலாசம் :....................
திகதி :....................
(இது தற்போதும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் உரியது).



வாழ்வக ஸ்தாபகர்
கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

# விழிப்புலனற்றவ
# திகழும் சுன்னா



**"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்"** என்கிறார் வள்ளுவர்.

கற்றவர்களை கண்ணுடையவர்கள் என்று உயர்வாகக் கூறப்படுகின்ற நிலையில், கல்லாதவர்களை முகத்தில் இரண்டு புண்ணுடையவர் என்று திருக்குறளில் சொல்லப்பட்டிருப்பது கண்பார்வையிருந்தும் கற்றுக்கொள்ளத் தவறியவர்களையே சுட்டிக்காட்டுகிறது.

இவ்விதமானால், விழிப்புலனற்றவர்கள் நிலை என்ன என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா? விழிப்புலன் இல்லாதிருந்தாலும் சமுதாயத்தில் வாழ்ந்து காட்ட முடியும் என்ற திடநம்பிக்கையுடன் அதனையே உன்னத சவாலாகக் கொண்டு "கல்வியே ஒளி, கல்வியே வழி" என்ற மகுட வாசகத்துடன் யாழ்.குடாநாட்டில் செயற்பட்டுவரும் வாழ்வகம் இல்லம், விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகின்றது என்று சொல்வதே மிகப் பொருத்தமானதாகும்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்திருக்கும் இந்த இல்லத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்து 24 வருடங்கள் நிறைவுபெற்றிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

வாழ்வகம் இல்லத்தின் தலைவராகவிருந்து சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர் ஆ.ரவீந்திரன். இவர் யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1986இல் யாழ்.பல்கலைக் கழகத்தில் இணைந்து கல்வி பயின்று 1990இல் பட்டதாரியாக வெளியேறினார். 2001ஆம் ஆண்டில் கல்வி முதுமாணிப்பட் டத்தைப் பெற்றுக்கொண்ட இவர், இப்போது யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். இவரைச் சந்தித்தபோது வாழ்வகம் இல்லம் தொடர்பாக பல தகவல்களை அறிந்து கொள்ள முடிந்தது.

இந்த இல்லம் தோற்றம் பெறுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்ற ஆசிரியையாவார். இவரது பெருமுயற்சியால் 1988ஆம் ஆண்டு தெல்லிப்பழை கிராமத்தில் வாடகை வீடொன்றில் இதன் செயற்பாடு ஆரம்பமானது. 1990ஆம் ஆண்டில் போர்க் காலச் சூழ்நிலைகளால் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தபோது இல்லத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டன. பின்னர் 1992ஆம் ஆண்டிலிருந்து உடுவில் கிராமத்திலுள்ள வாடகை வீடொன்றில் இல்லம் மீண்டும் இயங்கத் தொடங்கியது. 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட மற்றுமொரு இடப்பெயர்வின் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இல்லத்தின் செயற்பாடுகள் மீண்டும் 1997ஆம் ஆண்டிலிருந்து மானிப்பாயிலுள்ள வாடகை வீடொன்றில் ஆரம்பமாகி இடம்பெற்று வந்தன. அப்பொழுது சமூகசேவைத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பட்ட கடிதமொன்றில், வாழ்வகம் இல்லத்திற்கான நிரந்தரமான கட்டிடமொன்றை அமைத்துக்கொள்வதற்கு நிதியுதவி செய்யவிருப்பதாகவும், அதற்காக சொந்தக் காணியொன்றை பெற்றுக்கொள்ளும்படியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த வேளையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவதற்காக இலண்டன் சென்றிருந்தபோது, அவரது முயற்சி காரணமாக அங்குள்ள தமிழ் அனாதைகள் நம்பிக்கை நிதியத்தினர் நன்கொடையாக வழங்கிய ஒரு தொகை நிதியுதவியுடன் தற்போது வாழ்வகம் அமைந்துள்ள 32 பரப்புக் காணியை கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. றான் (RRAN) எனப்படும் வடபிரதேசத்திற்கான புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் ஊடாக சமூக சேவைத் திணைக்களம் ஆரம்பகட்ட வேலைகளுக்கான நிதியுதவியை வழங்கியிருந்தது. இந்த வகையில் அமைக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதியிலிருந்து சொந்தக் கட்டிடத்தில் வாழ்வகம் இல்லம் இயங்கிவருகின்றது என்கிறார் இல்லத் தலைவர் ஆ.ரவீந்திரன்.

இந்த இல்லம் ஆரம்பிக்கப்படுவதற்கு அடிப்படையாகவிருந்த காரணிகள் பற்றி கேட்டதற்கு இவ்வாறு சொல்கிறார்.

இலங்கையில் 1972ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைக் கப்பட்ட கல்வித்திட்டமொன்று நடைமுறைக்கு வந்தது. இதன்படி விழிப்புலன் வலுவிழந்த மாணவர்கள் சாதாரண பாடசாலைகளிலும் இணைந்து அங்குள்ள மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்பதற்கு வசதி கிடைத்தது.

ஆனால், வடபகுதியைப் பொறுத்தவரையில் இத்தகைய மாணவர்கயை வழிநடத்தக் கூடியதான ஆசிரியர்கள் இல்லாத நிலை இருந்தது. இந்த வேளையில்தான் மேல்மாகாணத்தில் ஆசிரியையாக சேவையாற்றிவந்த அன்னலட்சுமி அம்மையாரின் பங்களிப்பு கிடைத்தது.

1972 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து யாழ்.மாவட்டத்தில் தனது ஆசிரியப் பணியை பொறுப்பேற்றுக் கொண்ட இவர் இங்குள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று விழிப்புலன் வலுவிழந்த பிள்ளைகளை அரவணைத்து சாதாரண பாடசாலைகள் பலவற்றில் அவர்கள் கல்வியைத் தொடர வழிவகுத்தார்.

அன்னலட்சுமி அம்மையார் எண்பதுகளில் இறுதிப் பகுதியில் ஓய்வுபெறுகின்ற காலத்தை அண்மித்த வேளையில், அவரது மனதில் பார்வையற்ற மாணவர்கள் அனைவரும் தங்கியிருந்து தங்களது கல்வியை மேற்கொள்ளக்கூடியதாக நிரந்தரமான இல்லம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற எண்ணமொன்று உதயமானது. அவரது எண்ணமும் 2002 மார்ச் 9ஆம் திகதியன்று வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது.

அம்மையார் 1990ஆம் ஆண்டில் தனது ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதைத்
தொடர்ந்து, தனது சேவையை முற்றுமுழுதாக வாழ்வகம் இல்லத்தி
அர்ப்பணித்துக் கொண்டார்.

வாழ்வகம் இல்லம் நிரந்தரக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கிய
பரிபாலன செயற்பாடுகளை கவனிப்பதற்காக அமைக்கப்பட்ட பதி
உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவுக்கு அன்னலட்சுமி அ
தலைவராகவிருந்தார். 2006 ஆம் ஆண்டிலிருந்து நான் நிர்வாகக்
உபதலைவராக இணைந்து கொண்டேன். 2006 செப்டம்பர் மாதத்தி
யாரின் மறைவுக்குப் பின்னர் இல்லத்தின் தலைமைப் பதவியை நா
பொறுப்பேற்றுக் கொண்டேன் என்கிறார் ஆ.ரவீந்திரன்.

1988ஆம் ஆண்டு இல்லத்தின் செயற்பாடுகள் ஆரம்பமானபோது
பிள்ளைகள் இணைந்திருந்தார்கள். 2002ஆம் ஆண்டில் இல்லம் நிர
கட்டடத்தில் இயங்கத் தொடங்கியபோது 23 பிள்ளைகள் தங்கியிரு
இப்போது 16 ஆண்களும் 20 பெண்களுமாக மொத்தம் 36 பிள்ளை
தங்கியிருக்கிறார்கள். இவர்கள் ஐந்து முதல் 25 வயதிற்கு உட்ப
இவர்களுள் பெண் பிள்ளை கள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
பிள்ளைகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி கற்பத
வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

வாழ்வகம் இல்லப் பிள்ளைகளுள் நால்வர் பல்கலைக்க[illegible] மாண
இவர்களுள் ஒருவரான ரேகா கிருபானந்த தேவன் கடந்த ஆண்டு
நிறைவு செய்துகொண்டார். யோகலிங்கம் சுதாகரன் கடைசி வருட
மாணவனாகவும், டில்சியா ஞானசீலன், ராஜலட்சுமி மார்க்கண்டு ஆ
மூன்றாவது வருட மாணவிகளாகவும் கல்வி பயின்று வருகிறார்கள்.
இல்லத்தின் செயற்பாடுகள் பற்றி தலைவர் ஆ.ரவீந்திரனிடம் கேட்ட
தகவல்களை தெரிவித்தார். இல்லத்தில் ஆண், பெண் பிள்ளைகள்
தங்கியிருப்பதற்காக தனித்தனியான விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உணவு.
கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் உட்பட அனைத்துமே இலவசமாகவே வழங்கப்ப
றன. இங்கு பன்னிரண்டு பேர் பணியாளர்களாக கடமையாற்றி வருகிறார்கள். உள்ந
நாடுகளிலுள்ள பொது மக்களும் மற்றும் பொதுநல நிறுவனங்களும் வழங்கிவரும் உ
நன்கொடைகள் மூலமாகவே இல்லத்தின் சேவைகளை முன்னெடுத்துச் செல்லமுடிகி

பாடசாலைக் கல்விக்கு மேலதிகமான பாடப் போதனை, விசேட ஆங்கிலப் பயிற்சி
மிருதங்கம், இசை, கணனிப் பயிற்சி, யோகாசனப் பயிற்சிகள் போன்றவைகளும் இ
உள்ள பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. இங்குள்ள பிள்ளைகளது பிறந்த
கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதத்தில் வரும் உ
ஆற்றலுள்ளோர் தினத்தையொட்டி வலிகாமம் கல்வி வலயம் நடாத்திவரும் பேச்சு,
குழுஇசை, கட்டுரைப் போட்டிகளில் வாழ்வகப் பிள்ளைகளும் கலந்து கொண்டு பரி
பெற்றிருக்கின்றார்கள். மாற்று ஆற்றலு டையோருக்கான மெய்வல்லுனர் போட்டியிலு
வெற்றி களை ஈட்டி விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

இல்லப்பிள்ளைகளுக்கு வழங்கப்படும் சிறப்புப் போதனைகளுள் ஒன்றாக [illegible]ணினிப்
அமைந்துள்ளது. இதனை கண்பார்வை அற்றவர்களால் எவ்விதமாக மேற்கொள்ள மு
கேள்வி எழுகிறதல்லவா? சாதாரண விசைப் பலகையைத் தான் இதற்கு பயன்படுத்
ஆனால் விசேடமாகப் 'பேசும் மென்பொருள்' கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது. க
செயற்படுத்தும்போது திரையில்வரும் எழுத்துக்கள் என்ன என்பதை அந்தப் பேசும்
சொல்லும். அப்போது அதனைக் கேட்டு அறிந்து கொள்ள முடிகிறது. இங்கு கடந்த
மாதம் 30ஆம் திகதியன்று ஒலி நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இலண்டன
தலைமையகமாகக் கொண்டு இயங்கும் யாழ்.விஷன் நிறுவனத்தின் அனுசரணையுட
நூலகம் அமைக்கப்பட்டது. இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதியில் நிறுவப்பட்டு
முதலாவது ஒலி நூலகம் இதுவாகும். ஒரு தடவை பத்துப் பேர் நூலகத்தைதைப்
முடியும். ஒலிப்பதிவுக்குரிய சில கருவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலு
திற்கான தொழில்நுட்பத் திறமையுள்ள. பொறுப்பாளர் ஒருவரை நியமனம் செய்யவே
பதாலும் நூலகம் முழுமையாக செயற்படத் தொடங்க இன்னும் ஒரு மாதகாலமாகும்

செய்திப் பத்திரிகை நிறுவனங்கள் தங்கள் வெளியீடுகளை இலவசமாகவே வழங்க
வருகின்றன. இல்லப் பிள்ளைகளுக்கு இவற்றை வாசித்து வருகின்றார்கள். கடந்த
இந்தியாவிலுள்ள க்ரியா அகராதி நிறுவனம் பிரெயில் பதிப்பு தமிழ் அகராதிகளை
அன்பளிப்பாக வழங்கியிருந்தது. இந்த நிறுவனம் இந்திய மொழிகளில் முதன் முத
தமிழ் அகராதியை பார்வையற்றவர்களின் பயன்பாட்டிற்காக பிரெயில் பதிப்பாக வெ
ருப்பதுடன், அவற்றை முதன்முதலாக வாழ்வக இல்லத்திற்கு அன்பளிப்பாகச் செய்
சிறப்பாக குறிப்பிடத்தக்கது. இலங்கை நாணயத்தின்படி ஏழு லட்சத்திற்கும் அதிகம
பெறுமதியான 53 அகராதிப் பிரதிகள் கிடைத்திருக்கின்றன.

கடந்த 24 வருடகாலத்தில் இல்லத்திலிருந்து கல்வி கற்றவர்களுள் நூற்றுக்கும்
பலவித பதவிகளில் இணைந்திருக்கின்றார்கள். சிலர் பட்டதாரிகளாகவும் இருக்கிறார்
நாடுகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள். ஒரு சிலர் சட்டத்தரணிகளாகவும் இருக்கிறா
பேசும் விழிப்புலனற்றவர்களுள் முதலாவது சட்டத்தரணியாக அல்போன்ஸ் ஸ்ரனிஸ்
விளங்குகிறார். இவர் மாதகல் என்ற இடத்தைச் சேர்ந்தவர். இந்த வாழ்வகம் இல்ல
பல்வேறுபட்ட தகவல்களை வழங்கிய தலைவர் ஆ.ரவீந்திரன் நிறைவாக இவ்விதம்

"சமூகத்திலுள்ள நலிவுற்ற பிள்ளைகளை தேர்ந்தெடுத்து படிக்கவைப்பது என்பது
பணி. இத்தகைய ஒரு செயற்பாட்டை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்து
வேண்டுமானால் சமூகத்தினருடைய சகல உதவிகளும் தேவை. கண்பார்வையற்று
யிட்டு வருத்தப்படுவதை தவிர்த்து அவர்களை முன்னேற்றுவதையே முக்கிய தேவை
கொண்டு செயற்பட வேண்டும். தற்காலக் கல்வி செல்நெறிகளுக்கு ஏற்ற வகையில் கல்
யில் அவர்களை மேம்படுத்தி சமூதாயத்தின் ஒரு உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர

பார்வைக் குறைபாடு என்பதை காரணமாக வைத்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளை
யைத் தொடருவதற்கு எதுவித தடையையும் விதிக்கக் கூடாது. மாறாக கல்வியில்
யும் அறிவையும் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டும் அவர்களுக்கு குடும்
கல்வி போதிப்பது வரவேற்கத் தக்கது அல்ல. இதனால் ஆளுமை விருத்தியும் ஏற்
எங்கள் வாழ்வகம் போன்ற இல்லங்களின் மூலம் அவர்களது எதிர்காலம் நிச்சயம்
இது போன்ற இல்லங்கள் இருப்பதை பலரும் தெரியாமல் இருக்கிறார்கள். விழிப்புல
விழந்த சிறுபிள்ளைகள் அனைவரும் இல்லத்தில் இணைந்து கொண்டு தங்கள் கல்
தொடருவதற்கு அன்போடு அழைக்கின்றோம்" என்கிறார் ஆ.ரவீந்திரன்.

# ...வர்களுக்கு ஒளிவிளக்காக ...கம் ‘வாழ்வகம்’ இல்லம்

ந்திற்கே
யபோது
னொரு
அம்மையாரே
குழுவில்
தில் அம்மை
நான்
வ 13
நிரந்தரமான
விருந்தார்கள்.
ளைகள்
பட்டவர்களாவர்.
ரியிலும், ஆண்
தற்கான
ணவர்...வர்.
டுடன் படிப்பை
ஆகியோர்
ள். வாழ்வகம்
ட்டபோது பல
ள்
பு, உடை,
ப்பட்டு வருகின்
நாடு. வெளி
உதவிகள்,
கிறது.
ச்சி, சங்கீதம்,
இல்லத்தில்
த தினமும்
உலக மாற்று
, தனிஇசை,
பரிசில்களை
லும் பலர்
ரிப் பயி...
முடியும் என்ற
த்துகின்றார்கள்.
கணினியைச்
மென்பொருள்
ந்த ஜூலை
டனை
டன் இந்த ஒலி
டுள்ள
பயன்படுத்த
லும் நூலகத்
வண்டியிருப்
டும்.
ங்கி
வருடம்
இல்லத்திற்கு
தலாக தற்கால
வளியிடப்பட்டி
ப்திருப்பதும்
மான
அதிகமானோர்
ர்கள்.வெளி
றார்கள். தமிழ்
ல் அற்புதராஜ்
லத்தைப் பற்றி
ம் சொல்கிறார்.
ப கடினமான
துச் செல்ல
து இருப்பதை
வயாகக்
ல்வித் துறை
வர வேண்டும்.
ளைகள் கல்வி
ஆர்வத்தை
ம்ப மட்டத்தில்
ற்படாது.
வெற்றியாகும்.
லன் வலு
ல்வியைத்



அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் ஞாபகார்த்தமாக நோர்வே சிவசுப்பிரமணிய ஆலய இந்து இளைஞர் அறிவாலயத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த நினைவாலயம் கடந்த வருடம் (2011) டிசெம்பர் மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது.
இது இல்லப் பிள்ளைகளின் பிரார்த்தனை மண்டபமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.



வாழ்வகம் இல்லத் தலைவர் ஆ.ரவீந்திரன், உப தலைவர் திருமதி மோகனவதனி ரவீந்திரன் ஆகியோருடன் இல்லப் பிள்ளைகள்


## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



மருதனார்மடம் சுன்னாகத்தில் விழிப்புல வலுவிழந்த மாணவர்களை தன்னகத்தே ஈர்த்து அவர்களுக்கு கல்வி ஒளியூட்டி சமூகத்தில் மனிதர்களாக வாழ வழிசமைத்துக் கொண்டிருக்கும், வாழ்வகம் என்ற உயரிய நிறுவனத்தின் ஆரம்பகர்த்தவான கலாநிதி செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் நினைவு நாளான இன்று, வாழ்வகத்தினை சிறப்பாக நிர்வகித்து வரும் நிர்வாகத்தினருக்கும், மாணவர்க ளுக்கும், மற்றும் நலன்விரும்பிகள் யாவருக்கும் எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன்.

- சுந்தரம் அருமைநாயகம்

## வாழ்வகம் – தலைவரின் செய்தி



விழிப்புலனற்ற நிலையில் வாழ வழியின்றித் தவித்து நின்ற பிள்ளைகள் மீது கல்வி ஒளி பாய்ச்சி அவர்களையும் இந்தக் காசினியில் கண்ணியமாக வாழவைத்தவர் எமது வாழ்வக அன்னை அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள். இவர்களின் புற விழிகளுக்கு ஒளி கொடுக்க மருத்துவ விஞ்ஞானத்தால் முடியாதபோது அன்னையவர்கள் கல்வி மூலமாக அவர்களின் அக விழிகளுக்கு ஒளிகொடுத்து இந்த அகிலத்தை அற்புதமாய்த் தரிசிக்க வைத்தவர். மறைவாயிருந்து நிறைவாய்ப் பணியாற்றியவர். இத்தகு பெருமைமிக்க அம்மையாரின் ஆறாவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும். அவரின் சிந்தனையில் உதித்த வாழ்வக நிறுவனம் தனது வெள்ளி விழா ஆண்டினை நோக்கி வீறுநடைபோட்டுக்கொண்டிருக்கின்றது. இந்த நல்ல நாளிலே எமக்காக சிறப்பிதழ் ஒன்றினை வெளியிட்டு உதவிய தமிழ்நாதம் பத்திரிகை நிறுவனத்தினருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆ. ரவீந்திரன்

## வாழ்வகம் - செயலாளரின் செய்தி



வாழ்வக ஸ்தாபகர் அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள் விழிப்புலன் வலுவிழந்த பிள்ளைகளின் வாழ்வுக்கு வளம் சேர்த்த ஓர் உன்னத சேவையாளர். சம காலத்தில் எம்மோடு வாழ்ந்து இன்று வானுறை தெய்வமாய் எம்மை யெல்லாம் ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் இவ்வரிய சேவையாளரின் ஆறாவது ஆண்டு நினைவுநாளான இன்று நாமும் எமது உள்ளங்களை நல்ல சேவைகளின்பால் திருப்பிக்கொள்வோமாக. நலிவுற்றோர் யாவரும் நலமோடு வாழ நம்மால் முடிந்தவற்றைச் செய்வதே இந்த சேவையாளருக்கு நாம் செலுத்தக் கூடிய சிறந்த அஞ்சலியாக இருக்கும்.

- செ. மகாதேவா

## “விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்”

வாழ்வகம் இல்லத்தைச் சேர்ந்தவர் டில்வியா ஞானசீலன். யாழ்ப்பாணம் குருநகரை சொந்த இடமாகக் கொண்டவர். யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் மூன்றாவது வருட மாணவியாக கற்றுவருகிறார். இவரை நேரடியாக சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

“நான் குடும்பத்தில் நான்காவது பிள்ளை. எனக்கு ஒரு அண்ணாவும் இரண்டு அக்காமார்களும், ஒரு தங்கையும் இருக்கிறார்கள். எனது தகப்பனார் கடற்றொழில் செய்து வருகிறார்.

நான் பிறக்கும்போதே கண்பார்வை சற்று குறைவாகவே இருந்தது. எனினும் குருநகர் சென். ஜேம்ஸ் கல்லூரியில் இணைந்து முதலாம் தரத்திலிருந்து எட்டாம் தரம் வரை கல்வி பயின்றேன். பின்னர் கண்பார்வை முற்றாகவே அற்றுப்போய் விட்ட நிலையில் 2000ஆம் ஆண்டில் வாழ்வகம் இல்லத்தில் இணைந்து கொண்டேன். இதனால் எனது கல்வியை மேலும் தொடருவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இராமநாதன் கல்லூரியில் கல்வி பயிலும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தார்கள். பிரெயில் முறையிலான கல்வியின் ஊடாக 2005ஆம் ஆண்டில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றேன். உயர்தர வகுப்பில் பயின்று, 2008ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தேன். 2009 ஆண்டு யாழ்.பல்கலைக்கழக கலைப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டு இப்போது மூன்றாவது வருடமாக சிறப்புப் பட்டப் படிப்புக்கான கல்வியை தொடருகிறேன்” என்கிறார் டில்வியா.

பார்வையற்ற நிலையில் பரீட்சைகளை எவ்வாறு எதிர்கொண்டு வருகிறீர்கள்? எனக் கேட்டதற்கு “பரீட்சை மேற்பார்வையாளர் வினாத்தாளிலுள்ள கேள்விகளை வாசிப்பார். அவற்றைக் கேட்டு பிரெயில் முறையில் பதிவு செய்து அதே முறையிலேயே விடைகளையும் எழுதுவது வழக்கம். பொதுவாக வினாத்தாள் ஒன்றுக்கு விடையளிப்பதற்கு கொடுக்கப்படும் நேரத்திலும் பார்க்க பிரெயில் முறையில் விடையளிப்பதற்காக மேலதிகமாக அரைமணிநேரம் வழங்குவார்கள்” என்று சொல்கிறார்.

எதுவித இடையூறுமின்றி பல்கலைக்கழக கல்வியைத் தொடர முடிகிறதா? என ஒரு கேள்வியை முன்வைத்த போது, “பல்கலைக்கழகத்தின் ஆனந்த குமாரசாமி விடுதியில் தங்கியிருந்தே கல்வியை தொடருகிறேன். விடுதியிலிருந்து விரிவுரைகளுக்கு சென்று வருவதற்கு என்னுடன் விடுதியில் தங்கியிருக்கும் ஏனைய பிள்ளைகள் உதவி செய்வார்கள். விரிவுரை நிகழ்த்தப்படும் போது அவற்றை ஒலிப்பதிவு செய்து கொள்வேன். பின்னர் விடுதிக்கு திரும்பி அந்த ஒலிப் பதிவைக் கேட்டு பிரெயில் முறையின் உதவியுடன் குறிப்புகளை எடுத்துக் கொள்வேன். என்று பதிளித்த டில்வியா ஞானசீலனிடம் “உங்கள் எதிர்கால விருப்பம் என்னவாக இருக்கிறது” என்று கேட்டபோது “ஒரு விரிவு ரையாளராக வரவேண்டும் என விரும்புகிறேன்” என்று பதிலளித்தார்.



டில்வியா ஞானசீலன்

தகவலும் தொகுப்பும்:அ.கனகசூரியர்

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும்

## அமைச்சர் டலஸ் அடித்துக் கூறுகிறார்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் ஆட்சியமைக்கும் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவும் கிடைக்கும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 ஆசனங்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கர்ங்கிரஸிற்கு 7 ஆசனங்களும், தேசிய சுதந்திர முன்னணிக்கு ஒரு ஆசனமும் கிடைத்தது.

இந்த நிலையில் கிழக்கு மாகாண சபையை நிர்வகிக்க எந்தக் கட்சியுடன் இணைவது என்பது குறித்து மிக விரைவில் தீர்மானிக்கப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரிடம் இருந்தும் அழைப்பு கிடைத்துள்ளதாகவும் மாகாண சபைத் தேர்தலில் உதவி அனைத்துத் தரப்பிப்பினாிடம் கலந்தாலோசித்த பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் ஹக்கீம் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் பிரதிநிதயாக தன்னை நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன சந்தித்து இது சம்பந்தமாகப் பேசியதாகவும் தாம் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்த போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் ஏற்படுத்திய தடைகள் மற்றும் இடையூறுகள் குறித்து தாம் நினைவூட்டியதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தின் மன்னர்கள் யார் என்று தீர்மானிக்கும் கட்சியாக மாறியுள்ளதாகவும் தமது கட்சியின் ஆதரவின்றி எந்தக் கட்சியுட் ஆட்சியமைக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகள்-உறவினர்கள் சந்திப்பு

கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ்.சிறைச்சாலையில் உள்ள தண்டணை நிறைவேற்றப்பட்ட கைதிகள் உறவினர்களை சந்திக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.சிறைச்சாலையில் நடைபெற்றது.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம். செனரத் பண்டாரவின் ஏற்பாட்டில் யாழ்.சிறைச்சாலை பிரதம சிறைக்காப்பாளர் எஸ்.இந்திரன் மற்றும் சிறைச்சாலை நலன்புரிச் சங்க செயலாளர் பாலகிருஸ்ணன் சுசிதரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, தண்டணை நிறைவேற்றப்பட்ட 20 கைதிகள் தமது பெற்றோர்கள், மனைவி, பிள்ளைகளுடன் கலந்துரையாடவும், அவர்களுடன் உணவு பகிர்ந்து கொள்ளவும் சிறைச்சாலை நிர்வாகம் அனுமதி வழங்கியது.

இதன்போது, "குடியால் குலைந்த குடும்பம்" என்ற தொனிப் பொருளில் நாடகம் ஒன்று அளிக்கை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், யாழ்.சிறைச்சாலை நலன்புரிச் சங்கத் தலைவி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம், சட்டத்தரணி குருபரன், அரச சட்டத்தரணி வி.திருக்குமரன், தேவை நாடும் மகளிர் அமைப்பு இணைப்பாளர் சுமதி தனபாலசிங்கம், நலன்புரிச் சங்க உபதலைவி கே.பொன்னம்பலம், நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் மற்றும் கைதிகளின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# எம்மைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்கிறது ஜே.வி.பி.

தேர்தல்களில் கடைசியின் அடைவை கருத்திற்கொண்டு எம்மை மதிப்பிடக்கூடாதென மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கிய துறைகளில் காணப்படும் மிகவும் மோசமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கட்சி நடத்தும் தேர்தலுக்கு அப்பாலான விடயமாகுமெனவும் அவர் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணி, சப்ரகமுவவில் 2 ஆசனங்களையும் கிழக்கில் ஒரு ஆசனத்தையும் இழந்துள்ளதால் தேர்தலில் பின்னடைவைக் கண்டுள்ளது. ஆயினும் அது வடமத்திய மாகாணத்தில் அதன் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துள்ளது.

கல்வித்துறை பிரச்சினைகளையும் விவசாயிகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளையும் தீர்க்க கட்சி போராட்டத்தை நடத்துமெனவும் அவர் கூறினார். தேர்தல்களினால் மக்கள் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாதெனவும் அவர் கூறினார்.

# பிலிப்பைன்ஸ் பெண்ணுக்கு 'பேஸ்புக்' மூலம் கொலை மிரட்டல்

## - இலங்கையர் கைது

சமூக இணைய தளமான முகப் புத்தகம் (facebook) ஊடாக பெண் ஒருவரை அச்சுறுத்தியமை தொடர்பில் இலங்கை பிரஜை மீது டுபாய் நீதிமன்றில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

33 வயது மின்சார தொழில் நுட்பவியலாளரான குறித்த இலங்கை பிரஜை பிலிப்பைன்ஸ் நாட்டு பெண்ணை அச்சுறுத்தியுள்ளதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையரின் காதலுக்கு மறுப்புத் தெரிவித்ததால் அவர் தனக்கு முகப்புத்தகத்தில் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக பிலிப்பைன்ஸ் பெண்ணின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலை அச்சுறுத்தல் விடுத்ததை ஒப்புக் கொண்டுள்ள இலங்கையர், பிலிபைன்ஸ் பெண் தன்னிடம் பெற்றுக் கொண்ட ஆயிரம் திர்ஹாம் பணத்தை வழங்க மறுப்புத் தெரிவித்ததா[ல்] அவ்வாறு செய்ததாகவும் முகப் புத்தகத்தில் நண்பர்களின் கருத்தை கேட்டு மாத்திரமே அச்செயலில் ஈடுபட்டதாகவும் இலங்கையர் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 23ம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

# மு.கா.வின் முடிவு கிடைத்த பின் ஆளுநரை சந்திப்போம் - சம்பந்தன்

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்க உரிமை கோரும் கடிதத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக்ரமவிடம் நேரில் சமர்ப்பிக்கவில்லை எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஆட்சி அமைப்பு உரிமை கோருகின்ற கடிதம் ஏற்கனவே கிழக்கு மாகாண ஆளுநருக்கு தொலைநகல் மூலம் ஞாயிற்றுக் கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவை கிடைத்தவுடன் ஆளுநரை நேரில் சந்தித்து பேசவிருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வர்த்தமானி அறிவுதலின் பின்னரே ஆட்சியுரிமை கோரல் பற்றி கவனத்தில் கொள்ளப்படும் என்று ஆளுநர் அறிவித்துள்ளார்.

# அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல முற்பட்ட 45 பேர் கடற்படையினரிடம் சிக்கினர்

சட்டவிரோதமான முறையில் படகு மூலமாக அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச் செல்ல முற்பட்ட இலங்கையர்கள் 45 பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சைனி பபா எனப்படும் படகில் சென்ற இவர்கள் நீர்கொழும்பு கடற்பரப்பிலிருந்து 20 மைல் தொலைவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 35 பேர் தமிழர்கள் எனவும் 9 பேர் சிங்களவர்கள் எனவும் மற்றைய ஒருவர் முஸ்லிம் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இவர்கள் நீர்கொழும்பு, முல்லைத்தீவு, வவுனியா, மன்னா[ர்], யாழ்ப்பாணம், கல்முனை, ஹட்டன், திருகோணமலை, வென்னப்புவ, ஆகிய பிரதேசங்களைச் சேந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, சிறுவர் பாதுகாப்புக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 32 மாணவர்கள் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரினால் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் என்.ஏ.அலாம், யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி திருமதி சதீஸ் சர்மி மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




**31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியம்**

கடந்த 13.08.2012 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த
**கந்தன் நாகமுத்து (மணியம்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (10ஆம் திகதி) காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (12ஆம் திகதி) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் சுழிபுரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம் (மதவடி)

தகவல்
ஜெயம், மணி குடும்பத்தினர்.


# மு.கா.ஆதரவளிக்காவிட்டால்...(தொடர்)

கிழக்கு அரசியல் நிலவரம் குறித்து கருத்துக் எமது செய்தியாளர் கருத்துக் கேட்டபோதே அரியநேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் கிழக்கில் தமிழ் முஸ்லிம் சமூகத்தினரே அதிகமாக வாழ்கின்றனர்: இரு சமூகத்தினரும் தமது தேவைகளை நிறைவேற்றிக கொள்வதற்காக ஒருவரில் ஒருவர் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

கிழக்கு தேர்தல் முடிவுகளின் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் அரியதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. முஸ்லிம் காங்கிரசின் தீர்மானத்திலேயே கிழக்கு மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. நமக்குள் உள்ள தேவைப்பாடுகளை பேசி தீர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே காணப்படுகின்றன. எனவே பரஸ்பரம் புரிந்துணர்வுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் முன்வருமேயானால் அது ஒரு சிறந்த முடிவாக அமையும். முஸ்லிம் காங்கிரஸ் தனக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்.

இல்லையேல் அது ஒரு வரலாற்றுத் தவறாக அமையும் என குறிப்பிட்டுள்ள அரியநேந்திரன் எம்.பி. கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சிய மைக்க முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்குமேயானால் அனைத்து சமூகங்களினதும் அபிலாசைகளை நிறைவேற்றும் நல்லாட்சியை அமைக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு காத்திருக்கிறது. எனினும் அவ்வாறான ஆதரவு கிடைக்காமை போனால் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கில் மக்களுக்கு சேவை புரியும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ், முஸ்லிம்களுக்கு பொன்னான வாய்ப்பு

## தவறவிட வேண்டாம் என இரா.துரைரெட்ணம் கோரிக்கை

பதவிக்கும், சலுகைக்கும் அப்பாற்பட்ட வகையில் உரிமை மிக்க, அதிகாரமிக்க மாகாண சபையை உருவாக்குவதற்கான வரலாற்றுக் கடமையொன்றை தமிழ் முஸ்லிம் சமூகங்கள் இணைந்து தந்த சந்தர்ப்பமாக இதனைப் பார்க்க வேண்டும். இதுவொரு சரித்திர முக்கியத்துவம் நிறைந்தகாலம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றி தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# பச்சைத் தேயிலை தேநீர் பற்றி பொதுவாக நாம் அறிந்திருப்பது

புத்துணர்ச்சி அளித்து நம்மை சுறுசுறுப்பாக இருக்கப் பயன்படுவதையும் கோப்பியை விட இதில் கா.ஃ.பின் அளவு குறைவு (மூன்றில் ஒரு பகுதி) என்பதையும் தான்.

**மூன்று வகைத் தேயிலைகள்:**

தேயிலையை பக்குவப்படுத்தும் முறையைப் பொறுத்து 3 வகைப்படும். பச்சை தேயிலை, ஊலூங் தேயிலை மற்றும் கருப்பு தேயிலை.

நாம் பயன்படுத்தும் தேயிலை இலையின் அளவைப் பொறுத்து அதன் தரம் பிரிக்கப்படுகிறது. பொதுவாக பெரிய இலைகள் உள்ள நல்ல தரமான தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தூள் தேயிலை உள்நாட்டில் விற்கப்படுகின்றது.

இந்த மூன்று வகைத் தேயிலைகளில் பச்சைத் தேயிலை சிறந்ததாகும். இதன் மருத்துவக் குணம் நம்மை ஆச்சரியப்படுத்துவதாக உள்ளது. பெயருக்கேற்றவாறு இதன் நிறம் பச்சையாக இருக்கும். இதன் நிறம் ஏன் பச்சையாக உள்ளது என்றும் மற்றவற்றை விட ஏன் சிறந்தது என்றும் நமக்கு வியப்பாக இருக்கலாம்.

இந்த இயற்கையான பச்சை தேயிலை நம் உடல் நலத்திற்கு அவசியமானவற்றைப் பெற்றுள்ளது. தலைசிறந்த பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவ மையங்களின் ஆராய்ச்சியாளர்கள் பச்சைத் தேயிலையின் மருத்துவ குணங்களை ஆதாரத்துடன் தங்களது ஆராய்ச்சி கட்டுரைகளில் எழுதி உள்ளனர்.

நம் உடலின் உள்ள திசுக்கள் பல காரணங்களால் சேதம் அடைகின்றன. இந்த சேதத்தைக் கட்டுப்படுத்த நம் உடலில் இயற்கையாக ஏண்டிஆக்ஸிடண்ட் உள்ளது. ஆனால் சில சூழ்நிலைகளின் காரணமாக உடலில் உள்ள ஏண்டிஆக்ஸிடண்டின் அளவு போதுமானதாக இருப்பதில்லை. ஆனால் நாம் உண்ணும் உணவில் இயற்கையாக உள்ள உயிர்சத்து-சி, உயிர்சத்து-ஈ மற்றும் பீட்டாகேரோட்டின் போன்றன ஏண்டிஆக்ஸிடண்டின் பணியைச் செய்கின்றன. ஆக நாம் இளமையாக நோயின்றி வாழ ஏண்டிஆக்ஸிடண்ட் உள்ள உணவு மிக அவசியமானதாகும்.

கேன்ஸாஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சி முடிவின்படி பச்சைத் தேயிலை புற்றுநோய் மற்றுமுள்ள நோய்களிலிருந்து நமது திசுக்களைக் காப்பதில் சிறந்ததாக உள்ளது.

# சிறுநீர் கசிவா?

உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பெண்களை மிகுந்த தர்ம சங்கடத்துக்கு உள்ளாக்கும் இந்தப் பிரச்சனைக்கான காரணங்கள், அறிகுறிகள், தீர்வுகள் பற்றி டாக்டர்கள் கூறும் சில தகவல்கள்.

-முதுமையில் நான்கில் ஒரு பெண்ணுக்கு சிறுநீரை அடக்க முடியாத பிரச்சனை இருக்கிறது. ஒரு காலத்தில் வயதானவர்களின் பிரச்சனையாக இருந்த இது, இன்று இளம் வயதினரையும் தாக்க ஆரம்பித்திருக்கிறது. அதாவது 30களில் உள்ள பெண்களுக்கும் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது.


"இருமும் போதும், தும்மும் போதும், சிரிக்கும் போதும், திரும்பி உட்கார்ந்தாலோ, திரும்பிப் படுத்தாலோ சில பெண்களுக்கு சிறுநீர் கசிவு உண்டாகும். இன்னும் சிலருக்கு உடனடியாக சிறுநீர் கழித்தாக வேண்டிய உந்துதல் ஏற்படும். கழிவறைக்கு ஓடற வரைக்கும் கூடக் கட்டுப்படுத்த முடியாது.

-அடிக்கடி சிறுநீர் கழிக்கிறது, சிறுநீர் கழிக்கும் போது சிரமம், கர்ப்பப்பை இறக்கம், அரிதாக சிலருக்கு மலத்தையும் அடக்க முடியாதது.. இதெல்லாம் மகளிர் சிறுநீரியல் பிரச்சினைகள்.

-இடுப்பெலும்பு தசைகள் பலவீனமாகிறது, சுகப் பிரசவத்துக்குப் பிறகு உண்டாகிற பலவீனம், நரம்புகளில் உண்டாகிற பலவீனம், முதுமை, மெனோபாஸ் காரணமாக உண்டாகிற தசைகளோட தளர்ச்சி, கர்ப்பப்பை இறக்கம், கர்ப்பப்பை நீக்கும் அறுவை சிகிச்சை போன்ற பல காரணங்கள் உண்,


-பலரும் நினைச்சிட்டிருக்கிற மாதிரி இது குணப்படுத்த முடியாததில்லை. பாதிக்கப்பட்ட பெண்களை முதலில் எத்தனை முறை சிறுநீர் கழிக்கிறாங்கனு குறிக்கச் சொல்லுவோம். யூரோடைனமிக்ஸ்னு சொல்ற சோதனை செய்வோம்.

-சிறுநீர் குழாயிலிருந்து, ஒருவித ரப்பர் குழாயைப் பொருத்தி, அதை கம்ப்யூட்டரோட இணைச்சு, பிரச்சினையின் தீவிரத்தைக் கணக்கிடுவோம். சிலவித உடற்பயிற்சிகள், மிதமான மருந்துகள், தேவைப்பட்டா "ஸ்லிங்"னு சொல்லக் கூடிய அறுவை சிகிச்சை மூலமா இதைக் குணப்படுத் தலாம்" என்கிறார்கள்.




## ஆரோக்கிய நாதம்

# சிறுநீரக கோளாறுக்கு அருமையான மருந்து வாழைத்தண்டு



சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்களால் துன்பப்படுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. உடலில் உள்ள கழிவுகள் சிறுநீர் மூலம் வெளியேற்றப்படுகின்றது. சிறுநீரைக் கட்டுப்படுத்துவதாலோ அல்லது நோய் பாதிப்புகளாலோ சிறுநீர் சரிவர உடலை விட்டு வெளியேறாமல் இருக்குமானால், அது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

- சிறுநீரகத்தில் கல் உருவாவது இன்று மிக பரவலாகக் காணப்படும் நோய். அதிக காரமான உணவு, மிகக் குறைவாக நீர் அருந்துதல், வறட்சியான உணவு, மது அருந்தும் பழக்கம், அடிக்கடி சிறுநீரை அடக்குதல் போன்ற காரணங்களால் சிறுநீர் தடைபட்டு சிறுநீரகத்தில் கற்கள் உண்டாகின்றது.
- சிறுநீரக கற்களை வெளியேற்ற மருந்துகளும், மருத்துவ முறைகளும் இருந்தாலும் நாம் உட்கொள்ளும் உணவு மூலமும் சிறுநீரக கற்களை வெளியேற்றலாம்.
- வாழைத்தண்டுக்கு சிறுநீரக கற்களை வெளியேற்றும் தன்மை உண்டு. வாழைத்தண்டை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால், ஆரம்ப நிலையில் உள்ள கற்களை மிக எளிதாகக் கரைத்து விடலாம். சிறுநீரக கற்கள் உள்ளவர்கள் வாழைத்தண்டை வாரம் மூன்று முறை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.
- வாழைத்தண்டு நார்ச்சத்து மிக்க உணவாதலால் அதிக உடல் எடையால் அவதிப்படுகிறவர்கள், நீரிழிவு நோயாளிகள், ரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகரித்து இருப்பவர்களுக்கு இது மிகச் சிறந்த மருந்து. இது ரத்தத்தை தூய்மை செய்யும் இயல்புடையது.
- உடலைக் குளிர்ச்சியடையவைக்கும் தன்மையிருப்பதால் கோடை காலத்திற்கு மிகவும் ஏற்றது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும் சக்தி இருக்கிறது.
- மாதவிடாய் காலத்தில் இதை உணவில் சேர்த்தால் பெண்களின் உடல் பலமடையும். மாதவிடாய் கோளாறுகளால் ஏற்படும் அதிக இரத்தப்போக்கு, நோய்க்கு சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது.
- உடல் எடை குறைய உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள் வாழைத்தண்டை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# மற்ற தேயிலையிலிருந்து எப்படி மாறுபடுகிறது?

தேயிலையைப் பக்குவப்படுத்த பறித்த இலைகளை காய வைப்பதற்கு முன்பு ஃ.பெர்மெண்டே'ன் செய்யப்படும். இது பாலிலிருந்து தயிராக மாறுவது போன்ற ஒரு இரசாயன மாற்றமாகும். இந்த மாற்றத்தின்போது தேயிலையின் பசுமைத் தன்மை மற்றும் நிறம் மாற்றமடையும். (கருப்பு நிறமாக மாறுகின்றது.) இந்த முறையில் பக்குவப்படுத்திய தேயிலை தான் நாம் சாதாரணமாக பயன்படுத்தும் கருப்புத் தேயிலையாகும்.




ஆனால் பச்சைத் தேயிலை ஃ.பெர்மெண்டே'ன் செய்யாமல் காய வைக்கப்படுகின்றது. இதனால் தேயிலையின் இயற்கையான தன்மை மற்றும் நிறம் பாதுகாக்கப்படுகின்றது. இதனுடைய ருசியும் மணமும் மற்றவற்றைவிட சிறப்பாகவும் இருக்கும்.

ஊலூங் தேயிலை (OOLONG) குறைந்த நேரம் பெர்மெண்ட்டே'ன் செய்வதால் தன்மை மற்றும் நிறம் சிறதளவு மாற்றமடையும். இதன் நிறம் சிவப்பாக இருக்கும்.

**மருத்துவ பலன்கள்:**

இதில் உள்ள ஏன்டிஆக்ஸிடன்ட் வாய், இரைப்பை, கணையம், நுரையீரல், குடல், தொண்டை மற்றும் மார்பு புற்று நோயிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது.

ஹார்வேர்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியின்படி தேநீர் அருந்துபவர்கள் தேநீர் அருந்தாதவர்களை விட 40 சதம் வீதம் குறைவாகவே "மாரடைப்பு நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

பற்சிதைவை ஏற்படுத்தும் பாக்டீரியாவை கட்டுப்படுத்த இதில் இயற்கையாக உள்ள ஃ.புளோரைடு பயன்படுகிறது.

எலும்புவளர்ச்சிக்கு அவசியமான மங்கனீஸும் இருதய துடிப்பைக் கட்டுப்படுத்தும் பொட்டாஷியமும் இதில் அபரிதமாக உள்ளது.

ஓஹியோவில் உள்ள வெஸ்ட்டர்ன் ரிசர்வ் யுனிவர்சிடியின் சமீப ஆராய்ச்சியின்படி மூட்டு வலி (ஆர்டரிடிஸ்) நோயின் தன்மையை பச்சைத் தேயிலையில் உள்ள பாலிபினால் குறைக்கின்றது.

# இரவு நன்றாக தூங்க உதவும் உணவு வகைகள்!

தூக்கமின்மை நம்மில் நிறைய பேருக்கு அன்றாட வாழ்க்கையின் தொல்லைகளில் ஒன்றாகவும், தினசரி வாழ்க்கையை பாதிக்கிற ஒரு விஷயமாகவும் இருக்கு. அதை எப்படியாவது சரி செஞ்சிடனும்னு பாதிக்கப்பட்ட நாம எல்லாருமே, நாம படிச்ச, கேள்விப்பட்ட அல்லது மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு யுக்தியை கையாண்டு, நம்ம தூக்கமின்மையைப் போக்க முயற்சி செய்வோம்.

**செர்ரி பழங்கள்!**

நம் உடலுக்குள் இருக்கும், உடலியக்கங்களை கட்டுப்படுத்தும் ஒருவகையான கடிகாரமான உயிரியல் கடிகாரமானது, நம்ம தூக்கத்தையும் கட்டுப்படுத்துகிறது. இந்த கடிகாரத்தை உறக்கத்தை நெறிப்படுத்த ஆணையிடும் ∴ தூண்டும் திறனுள்ள மெலடோனின் (அநடயவழநெை) அப்படீங்கிற வேதியியல் பொருளின் இயற்கை உறைவிடம்தான் செர்ரி பழங்கள். செர்ரி பழங்களில் மிக அதிக அளவில் மெலெடோனின் இருப்பது கண்டறியப்பட்டது.

அதனால, இரவு உறங்கச் செல்வதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பாகவும், பயணங்களின்போதும் கொஞ்சம் செர்ரி பழங்களைச் சாப்பிட்டால் தூக்கம் வரும்.

**வாழைப்பழம்!**

இயற்கையான தசை தளர்த்திகளான பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் வாழைப்பழத்துல அதிகம் இருக்கிறது. அதுமட்டுமில்லாம, எல்-ட்ரிப்டோபான் அமினோ அமிலமும் வாழைப்பழத்துல இருக்குதாம். இந்த எல்-ட்ரிப்டோபான் அமினோ அமிலமானது மூளைக்குள்ளே 5-ர்வீ இரசாயனமா மாறிடும். அதன்பிறகு இந்த 5-ர்வீ-யானது செரடோனின் மற்றும் மெலடோனினாக மாறிவிடும்.



**டோஸ்ட்!**

மாவுச்சத்து நிறைந்த உணவுகள் எல்லாமே இன்சுலின் ஹார்மோன் சுரப்பதை தூண்டுகிறதாம். இந்த இன்சுலின் ஹார்மோன் உறக்கத்தை தூண்டக்கூடியதாம். எப்படின்னா, இன்சுலின் ஹார்மோனானது மூளையிலிருந்து ட்ரிப்டோபான் மற்றும் செரடோனின் ஆகிய இரசாயனங்களை இரத்தத்தில் அதிகரிக்கச் செய்யும் சமிக்ஞைகளை உருவாக்குகிறதாம். மூளையிலிருந்து வெளியாகும் இவ்விரு இரசாயனங்களும் உறக்கத்தை தூண்டிவிடும் திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது!

கோடை ஆரம்பத்தில் கிழங்கு நடவேண்டிய இரண்டு வயல்களில் கிழங்கு நடவேயில்லை, வயல்கள் சரியான சமயத்தில் உழுது பண்படுத்தப்படவில்லை. அடுத்த மாரிக்காலத்தில் கஷ்டங்கள் இன்னும் அதிகமாகிவிடும் என்று கண்டுகொள்வது சுலபமாகவே இருந்தது.

காற்றாடி யந்திரம் நிர்மாணிக்கும் வேலையும் சற்று எதிர் பார்த்ததைவிட கடினமான தாகத்தான் இருந்தது. எதிர்பாராத சில கஷ்டங்களும் முளைத்தன. கல்வெட்டி எடுக்க, சுக்காங்கற் குன்று ஒன்று பண்ணையிலே இருந்தது. பண்ணையிலே போதுமான சுண்ணாம்பும் சிமிட்டியம் தயாராக இருந்தன. கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான சாமான்கள் எல்லாம் சுலபமாகவே கிடைத்தன.

ஆனால் அந்தக் கற்களைத் தேவையான அளவுக்கு எப்படி உடைத்துச் சேகரிப்பது என்பதுதான் முதலில் விலங்குகளுக்குத் தெரியவில்லை. கற்கோடரியையும் சம்மட்டியும் கொண்டுதான் இதைச்




செய்யமுடியும் போல இருந்தது. ஆனால் இதை உபயோகிக்க விலங்குகளால் முடியாது. பின்னங்கால்களால் நின்று கொண்டால் ஒழிய இது சாத்தியமல்ல,


பல வாரங்கள் தொடர்ந்து பல முயற்சிகள் செய்தபின்தான், சரியான யோசனை ஒரு விலங்குக்குத் தோன்றியது. குன்றின் மேலிருந்து கற்களை உருட்டி விட்டால், தானாகவே கீழே விழுந்து அவை சிறுசிறு கற்களாக நொறுங்கிவிடும் என்பதுதான் அந்த யோசனை.

கீழே பெரிய கற்கள் கிடந்தன. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் குன்றின் மேல் எல்லா விலங்குகளுமாகச் சேர்ந்து புரட்டிக்கொண்டு போய் உச்சியிலிருந்து உருட்டித் தள்ளின. உச்சியில் கொண்டுபோய்க் கற்களைச் சேர்ப்பதுதான் மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. கயிற்றைக் கட்டி, ஆடு, மாடு, குதிரை எல்லாமாகச் சேர்ந்து மேலே இழுத்தன. அவசியமானபோது இந்த வேலையில் பன்றிகள் கூட உதவின. உடைந்த கற்களைக் கொண்டுவந்து காற்றாடி யந்திரம் கட்ட வேண்டிய இடத்தில் சேர்ப்பது சுலபமான வேலைதான்.

வண்டியில் போட்டுக் குதிரைகள் கொணர்ந்தன. சில ஆடுகள் ஒவ்வொரு கல்லாகப் புரட்டிக் கொணர்ந்து சேர்த்தன. முரியலும் பெஞ்சமினும் கூட பழைய ரேக்ளா வண்டியில் கற்களைப் போட்டு இழுத்துக் கொண்டு வந்து சேர்த்தன. கோடை முடிவுக்குள் தேவையான கற்கள் வந்து சேர்ந்து விட்டன. பன்றிகளின் மேற்பார்வையில் அதற்குப் பிறகு கட்டிட வேலை தொடங்கிற்று ஆனால் அது மிகவும் மெதுவாக, மிகவும் மெதுவாக நடந்தது. மிகவும் சிரமமான காரியமாகத்தான் இருந்தது.

(நாளை)

## வரைவோம் வாருங்கள்!



# சிறுவர் அமுதம்

# அறிவுரைகளை ஆராய்ந்து செயல்படுத்து

ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய விஷமுள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள்.



ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய சக்தி பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது.

ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து "அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே" என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

## விடுகதைகள்




1.எரிப்பவன் ஆனால் எரியாதவன். அவன் யார்?

2.எங்கள் அம்மா புடவையை மடிக்க முடியாது. எங்கள் அப்பா பணத்தை எண்ண முடியாது. அது என்ன?

3.எங்கள் அக்கா நல்ல அக்காள். எது வைத்தாலும் தாங்குவாள். அது என்ன?


4.ஆளிரண்டுக்கு ஆசனம் ஒன்று. அது என்ன?

5.ஆனைக்கும் குதிரைக்கும் எட்டாத தண்ணீர். தொண்டைமான் குதிரைக்கு தொடையளவு தண்ணீர். அது என்ன?

## இலங்கை



**தலைநகரம்:** கொழும்பு
**அமைவிடம்:** வடக்காக 6 பாகை 54 கலை கிழக்கு6°54'
**பெரிய நகரம்:** கொழும்பு
**ஆட்சி மொழிகள்:** தமிழ், சிங்களம்
**அரசு:** சனநாயக சோசலிசக் குடியரசு
**ஜனாதிபதி:** மகிந்த ராஜபக்ஷ
**பிரதம மந்திரி:** தி.மு.ஜயரத்ன
**பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம்:** 04.02.1948
**பரப்பளவு:** 65610 கிமீ²/ 25332 சதுரமைல்
**மக்கள் தொகை:** 2009 மதிப்பீடு 20,238,000
**நாணயம்:** இலங்கை ரூபாய் (LKR)
**நேர வலயம்:** (GMT + 5.30 மணி
**இணையக் குறி:** lk
**தொலைபேசி:** +94
**மின்னழுத்தம்:** 230V
**அலையெண்:** 50Hz




சுடோக்கு எண் 48 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 1 | 5 | 9 | 3 | 4 | 6 | 8 |
| 3 | 9 | 4 | 8 | 2 | 6 | 1 | 5 | 7 |
| 6 | 8 | 5 | 1 | 4 | 7 | 2 | 3 | 9 |
| 5 | 7 | 9 | 4 | 3 | 1 | 6 | 8 | 2 |
| 8 | 4 | 2 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 1 | 3 | 6 | 9 | 8 | 2 | 5 | 7 | 4 |
| 2 | 5 | 8 | 6 | 1 | 9 | 7 | 4 | 3 |
| 4 | 1 | 7 | 3 | 5 | 8 | 9 | 2 | 6 |
| 9 | 6 | 3 | 2 | 7 | 4 | 8 | 1 | 5 |

சுடோக்கு எண் 49

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | | | | | | 2 | |
| | 7 | | 4 | | | | | |
| | | 9 | 8 | | 1 | | 6 | 5 |
| | 2 | | 6 | | | | | |
| | | 3 | | 8 | | 2 | | |
| | | | | | 7 | | 4 | |
| 8 | 1 | | 7 | | 2 | 5 | | |
| | | | | | 8 | | 3 | |
| | 4 | | | | | | 7 | 1 |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# விலைப் பாலை விட முலைப்பால் சிறந்ததன்றோ?

***"பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப் பாலித் திடவேண்டும்"***

என்ற "கவிதை வெறி" கொண்ட பாரதியின் சிந்தனையில், கற்பனையில், எண்ணற்ற உள் நோக்கங்கள் குமுறியிட்டெழுந்ததை அவர்தம் பாடல்களையும் கட்டுரைகளையும் கற்போர் நன்கு அறிவர். பொதுமக்கள், கடவுளை வழிபடுவதற்குத் திருக்கோயில்கள் இன்றியமையாதவை., வழிபாட்டிற்கு இன்றியமையாத நல்ல சூழ்நிலையையும் தூய்மையையம் போற்றிக் காப்பவை. அது போலவே பொமக்கள் தம் குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்தவர்கள். இவர்கள் கல்வியில் பயிற்சி பெறுவதற்கு எல்லா நிலைகளிலும் பாடசாலைகள். பல்கலைக்கழகங்கள் இன்றியமையாதவை என்பதை


***வீடு தோறும் கலையின் விளக்கம்***
***வீதி தோறும் இரண்டொரு பள்ளி,***
***நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்***
***நகர்க ளெங்கும் பலபல பள்ளி***

என்ற கவிதையில் புலப்படுத்துவார். வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னால் வரும் கலைஞர்கள் பெற்றுப் பயன்பெற வேண்டும். தம்மையும் உயர்த்தித் தாம் பிறந்த நாட்டையும் உயர்த்த வேண்டும் என்பது பற்றி பாரதி கனவு கண்டான். வறுமையின் காரணமாக இளைஞ்ன ஒருவன் கல்வி பெறுவதற்குத் தடை ஏற்படக்கூடாது என்பதையும் சிந்தித்துள்ளார் கவிஞர். செல்வர்களும் அரசம் இதற்கு வழிவகை செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவதுபோல்,

***இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்***
***இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,***
***அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்***
***ஆல யம்பதி னாயிரம் நாட்டல்.,***
***பின்ன ருள்ள தருமங்கள் யாவும்***
***பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,***
***அன்ன யாவினும் புண்ணியம் கோடி***
***ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்***

தருமங்கள் யாவிலும் சிறந்தது "ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்" என்பது பாரதியின் முடிந்த முடிவு. நமது நாட்டுச் செல்வந்தர்கள் இந்தக் கவிதை வரியை உணர வேண்டும் வெறும் ஆடம்பரங்களுக்கு செலவு செய்வதை விடுத்து பயனுடைய முறையில் இறைவன் கொடுத்த செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும்.

ஆலயங்கள் நல்ல முறையில் வழிபாட்டிற்குரிய இடமாகத் திகழ வேண்டும். ஆனால் இன்று நமது நாட்டில் நடப்பது என்ன? விண்ணுயர் கோபுரங்கள் கட்டுகிறோம்., தடமுடலான திருவிழாக்கள், ஒரு லட்சத்திற்கு மேலான பணச்செலவில் சினிமாக் கலாசார நிகழ்வு.! இவற்றினால் விளைவது தான் என்ன? "திருவிழாவில் சண்டை" இதுதானே செய்தியாகக் கிடைக்கிறது. இந்தப் பணத்தில் ஊரிலுள்ள சனசமூக நிலையத்தை திருத்தி நல்ல கல்விக் கூடமாக மாற்ற முடியாதா? நமது பூமியில் எத்தனை பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இன்றிக் கிடக்கின்றன. யாராவது ஒரு பாடசாலையை திருத்தியமைக்க முழுச்செலவுகளை முன்வந்திருக்கிறார்களா? "நெஞ்சு பொறுக்குதில்லையே!" பாரதியின் வரிகள் தாம் நினைவுக்கு வருகின்றன. எல்லாவற்றையும் அரசு செய்ய வேண்டும் என்பது சரியானதல்ல பொதுமக்களும் உதவ வேண்டும்.



பாரதியார் [illegible] நண்பர்களும்.

சென்றிடு வீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்
என்றும்
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழியிற் பெயர்த்தல் வேண்டும்,
இறவாத புக புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

என்றும் பாரதி யோசனை கூறுகின்றார். துமிழில் எல்லாக் கலைகளையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக் கொள்வதில்லை. தமிழ் மொழியின் எல்லாவற்றிற்கும் தக்க கலைச்சொற்கள் இல்லாத காரணத்தால் இவ்வாறு எண்ணுகின்றனர். எந்த மொழியிலும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றாலன்றிப் புதிய கலைகட்கு வேண்டிய சொற்களும் சொற்றொடர்களும் அமைவதில்லை. பொருள்களை கருத்துக்களை - எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால் இவை தாமாக அமைந்துவிடும். குலைச் சொற்களை உண்டாக்கிக் கொண்டு தாய்மொழியில் கற்பித்தலைத் தொடங்க வேண்டும் என்று நினைப்பது, நீந்தக் கற்றுக் கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால் தான் அனைத்தும் சீர்ப்படும்.

காப்பெற்சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை இப்படி பல படிகளைக் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்த நிலையைத் தாய்மொழி பயிற்று மொழியாக அமைவதிலும் சந்திக்க வேண்டும். ஆங்கிலக் கல்வி பற்றிய பாரதியின் சிந்தனையை நினைவு கூற வேண்டும். மொழியைக் கற்கக் கூடாது என்பது சரியானதல்ல, சிங்களம் வேண்டாம் என்றோம். சொன்னவர் அம் மொழியில் புலமையுடையவர்களாக இருப்பதைக் காணுகிறோம். ஆங்கில மோகத்தினால் தாய்மொழியை புறக்கணிக்க கூடாது. இன்று நம் தமிழ் பகுதிகளில் தாய்த்தமிழ் வளர்ச்சி எப்படியிருக்கிறது!

இலக்கிய இலக்கண வளமும், சொற்களஞ்சியப் பேறும் பெற்றுள்ள தமிழ் மொழியின் நீர்மையை அறிந்து, பிற கலைகளையும் தமிழ் மொழியில் வடித்துத் தரும் பணியில் ஈடுபடுவோர்கள் தாம் "தமிழ் மொழி அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும்" என்ற



உண்மையை அறிவர். அப்பொழுதுதான் "சொல்லும் திறமையும் தமிழ் மொழிக்கில்லை" என்ற வகையும் நீங்கும் தமிழ் மொழியும் வளர்ந்து மேலும் வளம்பெறும்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்

என்ற பாட்டடியில் 'கவிஞர் ஞானம் கனிந்த நலம்' தெளிவாகப் புலனாகும்.

பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும் என்று கவிஞர் அறிவியல் கல்விக்கு ஆற்றுப்படுத் துகின்றார். தாய்மொழி மூலம் அக்கல்வி பெற வாய்ப்பு அமைக்கப் பெறுமானால் பருத்தி புடைவையாய்க் காய்த்தது போன்ற பலனை நல்கும் விலைப் பாலைவிட முலைப்பால் சிறந்ததன்றோ?

**"பாரதி போற்றுவோம்"**

*சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்*
*பொதுச் செயலாளர்*
*யாழ்பாணத் தமிழ்ச் சங்கம்.*

# பாரதி வாழ்வு: சில காலக் குறிப்புகள்

***1882***

டிசம்பர் - 11 சுப்பிரமணிய பாரதியார் பிறந்த நாள் (கார்த்திகைத் திங்கள் மூல நட்சத்திரம்) தந்தை: திரு.சின்னசாமி ஐயர், அன்னை: திருமதி.இலட்சுமி அம்மார். "சுப்பையா" இது வீட்டிலே வழங்கிய பெயர்.

***1887***

அன்னையார் மறைவு

***1889***

தந்தையார் மறுமணம். "மாற்றாந்தாய்" திருமதி. வள்ளியம்மாள், பாரதியை அன்புடன் பேணிய வளர்ப்புத் தாய் தந்தையார் மறுமணத்தின்போதே பாரதிக்குப் பூணூல் அணியும் சடங்கு. தந்தையாரிடம் தொடக்கக் கல்வி.

***1893***

கவிதைத் திறமை கண்டு புலவர்கள் "பாரதி" பட்டம் சூட்டினர்.

***1894-97***

நெல்லை, இந்தக கல்லூரிப் பள்ளியில் (ஐந்தாம் பாரம் வரை) கல்வி.

***1897***

ஜூன் 15 திருமணம். கடையம் திரு.செல்லப்பா ஐயரின் மகளார் செல்லம்மாள் பாரதியின் வாழ்க்கைத் துணைவியார்.

***1898***

ஜூன்: தந்தையார் மறைவு. பாரதி, காசிப் பயணம். அத்தை திருமதி. குப்பம்மாள் ஆதரவு. காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் கல்வி. வடமொழி, இந்துஸ்தானி மொழிகளில் பயிற்சி, அலகாபாத் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வில் முதல்வர்.

***1902***

எட்டயபுரம் மன்னர் அழைப்பை ஏற்று எட்டயபுரம் திரும்பினார். சமஸ்தானத்தில் பணி.

***1903***

சமஸ்தானப் பணி விடுத்து, மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியப் பணி. மூன்று திங்களே இப்பணியில் இருந்தார். சோழவந்தான் அரசஞ் சண்முகனார் விட்டுச்சென்ற இடத்தில் பாரதியார் பணியாற்றினார் என்பது இதுவரை பலர் அறியாத செய்தி.

***1904***

"சுதேச மித்ரன்" உதவ-ியாசியப் பணி. சென்னையில் பாரதியார்க்கு அறிமுகமானவர்களில் குறிக்கத்தக்கவர்கள்: ஜி.சுப்பிரமணிய ஐயர், சர்க்கரைச் செட்டியார், மண்டையம் எஸ்.என்.திருமலாச்சாரியார், டாக்டர் எம்.சி.நஞ்சுண்டராவ், ஜி.ஏ.நடேசன், வி.கிரு'ணசாமி ஐயர், திரு.வி.க. மூத்த மகள் தங்கம்மாள் பிறப்பு.

***1905***

வங்கப் பிரிவினையால் நாடு முழுவதிலும் தேசியக் கிளர்ச்சியில் பேரெழுச்சி.

***1906***

கல்கத்தாக் காங்கிரஸ் மாநாடு, தாதாபாய் நவுரோஜி தலைமையில் - சுதேசிப் பொருளே பயன்படுத்த வேண்டும், அயல்நாட்டுப் பொருள் புறக்கணிக்க (பகிஷ்கரிக்க)ப் படவேண்டும், தேசியக் கல்வித் திட்டம் வேண்டும் முதலிய கருத்துகளைத் தாங்கிய தீர்மானங்கள் கல்கத்தாக் காங்கிரசில்தான் நிறைவேறின. "சுயராஜ்யம்" என்ற சொல்லும் அதன் வழிப்பட்ட கருத்தும் வேர் பாய்ச்சிய காலம் அது.

கல்கத்தாவிலிருந்து திரும்பும் போதுதான் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்து, ஞானாசிரியராகக் கொண்டார். ஆன்மிகம் தேசியம் ஆகிய துறைகளிலே ஏற்கனவே ஈடுபாடு கொண்டிருந்த பாரதிக்கு இந்தச் சந்திப்பு மிகவும் வேகத்தையும் ஆழ்ந்த ஈடுபாட்டையும் ஏற்படுத்திற்று. அவருடைய ஆளுமையின் தீவிர வளர்க்சிக்கு நிவேதிதையார் தொடர்பு பெருங்காரணம் என்பது மிகையாகாது.

***1907***

ஏப்ரல் "இந்தியா" ஆசிரியப் பொறுப்பு - விபன சந்திரபாலர் சென்னை வருகை் பாரதியின் பெரும்பங்கு. "பால பாரத" என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் பாரதி நடத்தினார்.

சூரத் காங்கிரஸ்-இயக்கத்தில் பிளவு - தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளில் பாரதி ஒருவர் மற்றவர்கள் வ.உ.சிரம்பரம்பிள்ளை, சுரேந்திரநாத் ஆர்யா, வி.சர்க்கரைச் செட்டியார், வி.துரைசாமி ஐயர் - இவர்கள் திரகர் தலைமையில் இயங்கிய தீவிரவாதிகளாவர் - இந்தத் தீவிரவாதிகளில் லாஜபதிராய் குறிக்கத்தக்கவர்.

***1908***

ஜி.ஏ.நடேசன் வாயிலாகப் பாரதியாரை அறிமுகம் செய்துகொண்ட திரு.வி.கிரு'ணசாமி ஐயர் பாரதியாரின் சில பாடல்களை அச்சிட்டு வெளியிட உதவினார் - அப்போது அச்சானவற்றுள் "எந்தையும் தாய்", "ஜய பாரத" என்பவை சில. பாரதியாரே அவர் பாடல்களைப் பாடக் கேட்டுக் கிரு'ணசாமி ஐயர் உவகையுற்றுப் பாடல்களை வெளியிட முன் வந்தார். கிரு'ணசாமி ஐயருக்குப் பாரதியின் தீவிரவாதம் உடன் பாடு இல்லை அவர் மிதவாதி ஆயினும், பாரதியின் கவிதை களிலே நாட்டம் கொண்டார்.

# எதிர்க்கட்சியினருக்கு பதிலடி கொடுத்த ஒபாமா

# உலக பார்வை

தனது பிறப்புச் சான்று குறித்து சர்ச்சையை கிளப்புவோருக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மறைமுகமாக பதிலடி கொடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஹவாயில் பிறந்தார் என்பது குறித்து எதிர்க்கட்சியினர் சந்தேகம் கிளப்பியதுடன், பிறப்புச் சான்றிதழையும் கோரினர்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக 2001ஆம் ஆண்டு அவர் தனது பிறப்புச் சான்றை வெளியிட்டார். அதில் அவர் 1961ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி ஹவாயில் உள்ள மருத்துவமனையில் பிறந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.



அமெரிக்காவில் பிறந்தவர்கள் மட்டுமே அமெரிக்க ஜனாதிபதியாக முடியும் என்ற விதியைச் சுட்டிக் காட்டி எதிர்க்கட்சியினர் அவரது பிறப்புச் சான்றைக் கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மீண்டும் ஜனாதிபதியாக போட்டியிடும் ஒபாமா தேர்தல் பிரசாரத்துக்குச் சென்றார். வழியில் ஆர்லேண்டோ என்னுமிடத்தில் தனது காரை நிறுத்திய ஒபாமா அங்குள்ள விளையாட்டு மையத்துக்குள் நுழைந்தார்.

அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவனிடம் கலந்துரையாடும் போது, அச்சிறுவனின் தாய், தனது மகன் ஹவாயில் பிறந்தவன் எனக் கூறினார்.

ஹவாயில் பிறந்தாயா? உன்னிடம் பிறப்புச் சான்று இருக்கிறதா? எனக் கேட்டுச் சிரித்துள்ளார். இதன் மூலம் தனது பிறப்புச் சான்று கோரிய எதிர்க்கட்சியினருக்கும் மறைமுகமாக ஒபாமா பதிலடி கொடுத்துள்ளார்.



தேர்தல் பிரச்சாரத்திற்காக புளோரிடா சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அங்குள்ள பீசா கடைக்கு சென்ற பொது கடை உரிமையாளர் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஒபாமாவை தூக்கி அணைப்பதை படத்தில் காணலாம்

## ஈராக்கில் அடுத்தடுத்து தொடர்ச்சியாக குண்டுவெடிப்பு:

- 52 பேர் பலி

ஈராக்கில் நிகழ்ந்த அடுத்தடுத்த குண்டுவெடிப்பில் 52 பேர் பலியாயினர், 250க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் உள்ள பாதுகாப்பு படைகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக நடமாடும் மார்க்கெட்டுகளை குறி வைத்து பல்வேறு இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதல்களில் குறைந்தது 52 பேர் பலியாகினர், 250-க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

தெற்கு ஈராக்கில் உள்ள ஒரு மசூதி அருகே நடந்த மிக மோசமாக இரு கார் குண்டுவெடிப்பில் மட்டும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

மேசன் பகுதியில் நடந்த தாக்குதலில் 14 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

இந்த தாக்குதல்களில் இராணுவ வீரர்கள், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் இறந்துள்ளனர்.



எண்ணெய் நிறுவனம் ஒன்றின் அருகே நடந்த மற்றொரு தாக்குதலில் அங்கு வேலையில் சேருவதற்காக நின்றிருந்த பலர் உயிரிழந்தனர்.

இந்த மாதம் மட்டும் நடந்த தாக்குதல்களில் மொத்தம் 82 பேர் பலியாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரியா விவகாரம்: புடின்-ஹிலாரி கிளிண்டன் பேச்சுவார்த்தை

சிரியா விவகாரம் குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ரஷ்யாவிலுள்ள வலாடிவோஸ்டோக் நகரில் நடைபெறும் ஆசியா-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் - 20க்கும் மேற்பட்ட நாட்டு தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதில் அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கலந்து கொண்டார். பின்னர் அவர் சிரியா விவகாரம் குறித்து ரஷ்யா ஜனாதிபதி புடின், வெளிவிவகாரத்துறை அமைச்சர் செர்கிய் லாவ்ரோவ் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இது பற்றி ஹிலாரி கிளிண்டன் கூறுகையில், சிரியா பிரச்சினை தொடர்பாக ரஷ்யாவின் நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தீர்வு காண்பது குறித்து பேச்சு தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனாதிபதி அசாத் துக்கு ரஷ்யாவும், சீனாவும் ஆத ரவளித்து வருகின்றன.

இந்நிலையில் தற் போதைய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக ஹிலாரி கிளிண்டன் கூறியிருப்பது சிரிய பிரச்சினையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

## சர்ச்சைக்குரிய தீவுகள் விவகாரம்: சீனா- ஜப்பான் தலைவர்கள் திடீர் சந்திப்பு

சீனா- ஜப்பான் நாடுகளுக்கிடையே அமைந்துள்ள தீவுகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினை உருவாகியுள்ளது.

இவ்விரு நாடுகளை சேர்ந்த ஆர்வலர்கள் பிரச்னைக்குரிய தீவுகளுக்கு சென்று கொடியேற்றினார்கள்.

இந்த தீவுகள் ஜப்பான் நாட்டை சேர்ந்த தனியாருக்கு சொந்தமானது. எனவே இதை அரசே விலைக்கு வாங்கலாம் என ஜப்பான் அரசாங்கம் முடிவு செய்தது.

ஆனால் இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவில் நடைபெறும் ஆசிய- பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க சென்ற சீன ஜனாதிபதி ஹு ஜிண்டாவோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடா ஆகியோர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுமார் 15 நிமிடங்கள் நீடித்த இந்த பேச்சுவார்த்தையில் இடம் பெற்ற அம்சங்கள் குறித்த விவரம் வெளியிடப்படவில்லை.

## மோனாலிசா ஓவியத்தை எங்களிடம் ஒப்படையுங்கள்:

- பிரான்சிடம் இத்தாலி கோரிக்கை

பிரான்ஸ் மியூசியத்தில் உள்ள வரலாற்று புகழ்பெற்ற மோனாலிசா ஓவியத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று இத்தாலியின் தேசிய வரலாறு, கலாசாரம் மற்றும் நினைவுச் சின்ன பாதுகாப்பு கமிட்டி வலியுறுத்தி உள்ளது.

இத்தாலியை சேர்ந்த ஓவியர் லியானார்டோ டாவின்சி. இவர் வரைந்த ஓவியங்கள் உலக புகழ் பெற்றவை.

அவற்றில் மர்ம புன்னகையுடன் உள்ள மோனாலிசா ஓவியம் மிகச் சிறந்த ஓவியமாக போற்றப்படுகிறத

கடந்த 1503ஆம் ஆண்டில் மோனாலிசா ஓவியத்தை வரைய தொடங்கி சில ஆண்டுகளில் முடித்த டாவின்சி, பிரான்சுக்கு 1516ஆம் ஆண்டு குடிபெயர்ந்தார்.

அப்போது டாவின்சியிடம் இருந்து பிரான்ஸ் மன்னர் ,குடும்பத்தினர் அந்த ஓவியத்தை வாங்கி வைத்துக் கொண்டனர். பிரான்ஸ் புரட்சிக்கு பின்னர் அந்த ஓவியம் பாரிசில் உள்ள புகழ்பெற்ற லூவ்ரி மியூசியத்தில் வைக்கப்பட்டது.



கடந்த 1911ஆம் ஆண்டு மோனாலிசா ஓவியம் கொள்ளை போனது. மியூசியத்தில் வேலை செய்த வின்சென்சூ பெருஜியா என்பவர், ஓவியத்தை திருடி சென்றது 2 ஆண்டுகள் கழித்து கண்டுபிடிக்கப்பட்ட

இவர் இத்தாலி மீது பற்றுள்ளவர். பிளாரன்ஸ் நகரில் வசித்த அவர் வீட்டில் இருந்து மோனாலிசா ஓவியம் மீட்கப்பட்டது. பினனர் பாரிசில் உள்ள லூவ்ரி மியூசியத்தில் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் இத்தாலியின் பொக்கிஷமான மோனாலிசா ஓவியத்தை திரும்ப உஃபிஸி மியூசித்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று இத்தாலி தேசிய வரலாறு, கலாசாரம் மற்றும் நினைவுச் சின்ன பாதுகாப்பு கமிட்டி வலியுறுத்தி உள்ளது.

மோனாலிசா ஓவியம் 20ம் ஆண்டில் உஃபிஸி மியூசியத்தில் தான் இருந்தது. அது கொள்ளை அடிக்கப்பட்டது.

எனவே, ஓவி யத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று பிரசார குழுவி னர் வலியுறுத்தி வருகின்றனர்.

பிரான்ஸ் அரசுக்கு கோரிக்கை விடுத்து ஒன்றரை லட்சம் பேர் கையெழுத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தாலியின் கோரிக்கை பிரான்ஸ் மறுத்து வருகிறது.

## ஈராக்கின் துணை ஜனாதிபதிக்கு மரண தண்டனை விதிப்பு

ஈராக்கின் துணை ஜனாதிபதி தாரிக் அல் ஹாஷிமி, 45 பேரை கொன்றது தொடர்பான வழக்கில் அந்நாட்டு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை அறிவித்துள்ளது.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின் அமெரிக்காவின் உதவியுடன் அங்கு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.

துணை ஜனாதிபதி பதவியில் இருந்த தாரிக் அல் ஹாஷ்மி, 26 சம்பவங்களில் 46 பேரை சுட்டுக் கொல்ல உத்தரவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த வழக்கில் அவரை ஆஜராகி வாக்குமூலம் அளிக்கும்படி பாக்தாத் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால் துருக்கி சென்ற ஹாஷ்மி மீண்டும் நாடு திரும்பவில்லை.

இதற்கிடையே ஹாஷ்மி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு இவர் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். கடந்த 2010ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் மீண்டும் இவர் துணை ஜனாதிபதியாக தெரிவானார்.

# அண்ணா வளைவு விவகாரத்தில் அபாண்ட புகார்: கருணாநிதியை சாடுகிறார் முதல்வர் ஜெ.



அண்ணா வளைவு விவகாரத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அபாண்டமான குற்றச்சாட்டுக்களை கருணாநிதி சுமத்துகிறார்.

அண்ணா பவள விழா வளைவை அகற்ற நான் உத்தரவிடவில்லை என்று, முதல்வர் ஜெயலலிதா பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டு பதிலளிப்பதை வாடிக்கையாக கொண்டிருக்கும் கருணாநிதி, அண்ணா வளைவை இடிக்க முதலில் அனுமதி அளித்து விட்டு, இடிப்பு பணிகள் பாதியளவு முடிந்த நிலையில், இடிக்கக்கூடாது என, நான் திடீரென உத்தரவிட்டுள்ளதாக கூறி இருக்கிறார்.


இது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. கடந்த 2010ம் ஆண்டு தி.மு.க., ஆட்சியின் போது தான், 117 கோடி ரூபாயில், நெல்சன் மாணிக்கம் சாலை, அண்ணாநகர் மூன்றாவது நிழற்சாலை சந்திப்புகளை இணைக்கும் வகையில், மேம்பாலம் கட்ட அனுமதிக்கப்பட்டது. தொடர்ந்து, 2011 பொதுத் தேர்தலில் அ.தி.மு.க., வெற்றிபெற்று, நான் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றேன்.

உத்தரவிடவில்லை:

ஆட்சி மாற்றத்திற்குப் பின், முந்தைய அரசால் விட்டுச் செல்லப்பட்ட பணிகள் வழக்கமாக மேற்கொள்ளப்படுவது போல், இந்த மேம்பாலப் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இந்த மேம்பாலப் பணி மற்றும் வளைவு அகற்றப்படுவது குறித்து என்னை யாரும் கலந்தாலோசிக்கவும் இல்லை நான் அகற்ற உத்தரவிடவும் இல்லை.

அரசின் அனைத்து முடிவுகளும், முதல்வர் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுவதில்லை என்பது, ஐந்து முறை முதல்வராக இருந்த கருணாநிதிக்கு தெரியாதா? அரசு நிர்வாகம் எப்படி செயல்படும் என்று தெரியாமலேயே முதல்வராக காலத்தை தள்ளிவிட்டு, இதுபோன்ற கேள்வியை தனக்கு தானே எழுப்பி பதிலளிக்கிறாரா? என்பதற்கு அவர் தான் பதிலளிக்க வேண்டும்.

# இந்திய செய்திகள்



வரும், 19ஆம் திகதி, விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி, மும்பையில் பல்வேறு விதமான விநாயகர் சிலைகள் தயார் செய்யப்பட்டு, ஆங்காங்கே வைக்கப்பட உள்ளன. அப்படி தயார் செய்யப்பட்ட, இரு விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்

# ரூபாய் நோட்டில் விஜயகாந்த் படம்: கட்சியினர் வைத்த பேனரால் பரபரப்பு

திருக்கோவிலூரில் தே.மு.தி.க., வினர் வைத்துள்ள விளம்பர பேனரில், 1,000 ரூபாய் நோட்டில் விஜயகாந்த் படம் உள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் ஏரிக்கரை மூலையில், தே.மு.தி.க., கனகனந்தல் கிளை சார்பில் வைத்துள்ள டிஜிட்டல் பேனர், மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கட்சியின், எட்டாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு வைத்த பேனரில், இடதுபுறம் காந்தி படம் போட்ட 1,000 ரூபாய் நோட்டு



அச்சிடப்பட்டு, அதில், "இன்று" என எழுதப்பட்டுள்ளது. அடுத்து, வலதுபுறத்தில் அதே 1,000 ரூபாய் நோட்டில், காந்தி படத்திற்கு பதில், விஜயகாந்த் படம் இடம் பெற்றுள்ளது. இதில், "நாளை" என்ற வாக்கியம் உள்ளது.

2005ல் தே.மு.தி.க., தலைவர், 2006ல் சட்டசபை உறுப்பினர், 2011ல் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர், 2016ல் தமிழக முதல்வர், 2019ல் இந்தியாவின் பிரதமர் என்ற நிஜமும், கற்பனையும் கலந்த வாசகத்துடன், கட்சி மாவட்டச் செயலர் வெங்கடேசன் நிர்வாகிகளுடன் நின்று, விஜயகாந்த் படம் உள்ள 1,000 ரூபாய் நோட்டைக் காட்டி, இன்று கற்பனையில் நாளை நிஜத்தில் என, எழுதப்பட்டுள்ளது.

# பிரதமரின் சொத்து மதிப்பு இரு மடங்காக உயர்வு



பிரதமர் மன்மோகன் சிங்கின் சொத்து மதிப்பு, கடந்த ஓராண்டில், இரு மடங்காக உயர்ந்துள்ளது. இருப்பினும், அவரது அமைச்சரவை சகாக்களை ஒப்பிடுகையில், பிரதமரின் சொத்து மதிப்பு மிகவும் குறைவே. பிரதமர் உள்பட, மத்திய அமைச்சர்களின் சொத்து விவரங்கள், பிரதமர் அலுவல இணைய தளத்தில், ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகின்றன. அதேபோல், இந்த ஆண்டும் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரதமர் மன்மோகன் சிங்கின், சொத்து மதிப்பு, 10.73 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டை மதிப்பை ஒப்பிடுகையில், இது, 100 சதவீதம் அதிகம். சண்டிகர் மற்றும் டில்லி நகரங்களில், பிரதமருக்கு சொந்தமாக, இரண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. இவற்றின் தற்போதைய மதிப்பு, 7.27 கோடி ரூபாய். பாரத ஸ்டேட் வங்கியின் பல்வேறு கிளைகளில், மன்மோகன்சிங் கணக்கில், 3.46 கோடி ரூபாய் உள்ளது. 2.75 லட்சம் மதிப்பில், 150 கிராம் நகைகள் உள்ளன. கடந்த ஆண்டு இருந்த, அதே சொத்துக்கள்தான், இப்போதும், பிரதமர் பெயரில் இருக்கின்றன.

ஆனால், அரசால் நியமிக்கப்பட்ட, அலுவலர் மூலம், மதிப்பீடு செய்யப்பட்டதில், பிரதமரின் சொத்து மதிப்பு, இரு மடங்காக உயர்ந்துள்ளது. மன்மோகன் சிங்கிற்கு சொந்தமாக, மாருதி 800 கார்தான், உள்ளது. அதன் மதிப்பு, 21 ஆயிரம் ரூபாயாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர்களில், பிரபுல் பட்டேலின் சொத்து மதிப்பு, இந்த ஆண்டு, 52 கோடி ரூபாயாகவும், சரத் பவாரின் சொத்து மதிப்பு, 22 கோடி ரூபாயாகவும் உள்ளது. மத்திய அமைச்சர்களில், மிகவும் வசதி குறைந்த அமைச்சராக இருப்பது, ராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணியே. இவரது சொத்து மதிப்பு, 55 லட்சம் ரூபாய் மட்டுமே. அமைச்சர்களில் இவர் மட்டுமே லட்சாதிபதி. இவ்வாறு இணைய தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8 மாநிலங்களில் டுவிட்டரை முடக்க மத்திய அரசு திட்டம்

இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகம் உட்பட 8 மாநிலங்களில் டுவிட்டர் சமூக தளத்திற்கு தடை விதிக்க மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தை தொடர்ந்து பெங்களூர், சென்னையில் உள்ள வட கிழக்கு மாநில மக்களுக்கு ஆபத்து நிகழும் என்ற வதந்தி பரவியதையடுத்து இந்த நடவடிக்கையை எடுக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கர்நாடகா, தமிழ்நாடு, அசாம், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம்



உட்பட 8 மாநிலங்களில் இந்த வதந்தி பரப்பப்பட்டதாக மத்திய அரசு அடையாளம் கண்டுள்ளது.

இதனையடுத்து இந்த மாநிலங்களில் டுவிட்டர் சமூகதளத்தை எப்படி முடக்குவது பற்றி தொழில் நுட்ப வல்லுனர்களிடம், மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆலோசனை கேட்டுள்ளது.

உள்துறை அமைச்சகத்தின் அறிவுரைப்படி இத்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடகிழக்கு மாநிலத்தவர் இடையே வதந்தியை பரப்பியதாக இது வரை 310 இணையதளங்களை மத்திய அரசு முடக்கியுள்ளது.

# 6 மாத சம்பள பாக்கி: கிங்பிஷர் விமானிகள் போராட்டம்

இந்தியாவின் பிரபல தனியார் விமான நிறுவனமான கிங்பிஷர், தனது ஊழியர்களுக்கு 6 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை.

இந்நிலையில் ஊதியத்தை தரக்கோரி இன்று முதல் கிங்பிஷர் ஏர்லைன்ஸ் விமானிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரை தலைமையிடமாக கொண்டு செயற்படும் கிங்பிஷர் கடுமையான நிதிநெருக்கடியுடன் இயங்கி வருகிறது.

இதனால் மிகக்குறைந்த அளவிலேயே இந்த நிறுவன விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் விமானிகளின் எச்சரிக்கை நிறுவனத்துக்கு மேலும் நெருக்கடியை அதிகரித்துள்ளது.



அந்த நிறுவனத்தில் பணியாற்றும் பொறியாளர்கள் பலர் கடந்த புதன்கிழமை முதல் பணிக்கு வரவில்லை.

கடந்த 6 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாததே இதற்கு காரணம் என்று தெரிகிறது.

இதற்கு முன்பு கிங்பிர் விமானிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அப்போது அனைத்து விமானிகளும் ஒட்டுமொத்தமாக பணிக்குச் செல்லாமல் இருந்தது இல்லை.

இப்போது டெல்லி, மும்பையில் உள்ள அந்நிறுவனத்தின் விமானிகள் அனைவரும் கூட்டாக ஒரே நேரத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

# வரி ஏய்ப்பு தொடர்பாக பொலிவுட் நடிகர் சயீப் அலிகானிடம் விசாரணை

சுங்கக்கட்டணம் செலுத்தாமல் வெளிநாட்டிலிருந்து சொகுசு காரை இறக்குமதி செய்த குற்றத்திற்காக பாலிவுட் நடிகர் சயீப் அலிகானிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

இந்திய குடிமகன் ஒருவர் வெளிநாட்டில் தொடர்ந்து 2 ஆண்டுகள் தங்கி இருந்த பின்னர் குடியிருப்பு மாற்ற விதிகள்" சலுகையின் கீழ் இந்தியாவில் தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக, வெளிநாட்டிலிருந்து சொத்துக்களை சுங்கக் கட்டணம் செலுத்தாமல் இறக்குமதி செய்து கொள்ள முடியும்.

அந்த சலுகையின்படி, கேரளாவைச் சேர்ந்த கொலங்கா மனுனி முகமது என்பவர் கடந்த 2004ம் ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து சொகுசு கார் ஒன்றை இறக்குமதி செய்து இந்தியாவுக்கு கொண்டு வந்தார்.

ஆனால் அந்த சொகுசு கார் பிரபல பாலிவுட் நடிகர் சயீப் அலிகான் பெயரில் தற்போது உள்ளது.

காரை இறக்குமதி செய்த மனுனி முகமது, அதனை வாங்கும் அளவுக்கு வசதி கொண்டவர் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே கார் வாங்குவதற்கான பணத்தை, ஐக்கிய அரபு எமிரேட்சில் வைத்தே மனுனி முகமது விடம் நடிகர் சயீப்

அலிகான் தந்து இருக்கலாம் என்று அமலாக்கப்பிரிவு சந்தேகப்படுகிறது.

# தேசிய அணிக்கு வீரர்களை தெரிதல்: ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி

தெல்லிப்பழை

விளையாட்டுத்துறை அமைச்சினதும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினதும் வடமாகாண விளையாட்டுத்துறையினதும் ஏற்பாட்டில் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்களை தெரிவு செய்வதற்காக முதற்கட்டமாக வேலணை பிரதேச செயலகத் திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 21 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இப் போட்டிக்கு விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன், வேலணை பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தர்களான சோ.பத்மரூபன், எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் வீரர்களை தெரிவு செய்யும் முகமாக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுனர் பா.முகுந்தன், வேலணை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.யசிதரன், வேலணை பிரதேச பதில் விளையாட்டு உத்தியோகத்தர் க.மயூரன், ஊர்காவற்துறை பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சதீஸ்கண்ணர், வேலனை பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தர் தி.கோகுலரூபன், வேலணை பிரதேச உதைபந்தாட்ட வீரர்களான மு.சிவநேசன் மற்றும் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களை தெரிவு செய்தார்கள்.

இப் போட்டியில் முதல் அரையிறுதியில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் வேலணை துறையூர் ஐயனார் வி கழகம் 4:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது. இறுதி ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற ரீதியில் வெற்றி பெற்று வெற்றி கேடயத்தினை தனதாக்கக் கொண்டது.




# அளவெட்டி மத்திய வி.கவின் கிரிக்கெட் வள்ளுவர், சரஸ்வதி காலிறுதியில்

தெல்லிப்பழை

அளவெட்டி மத்தியவிளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடாத்தும் மென்பந்தாட்டப் போட்டியின் "பி" பிரிவிற்கான போட்டி மல்லாகம் ஆர்.டி.எஸ் மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவது போட்டியாக அரியாலை சரஸ்வதி அணிக்கும் மூலாய் விக்டோரி அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி 8 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப்பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்டோரி 7 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் 5 ஓட்டங்களால் சரஸ்வதி அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டி ஏழாலை ஞானகலா அணிக்கும் வி.பி அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானகலா 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 57ஓட்டங்களைப்பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வி.பி 7 விக்கெட்டை இழந்து 33 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் 24 ஓட்டங்களால் ஞானகலா அணி வெற்றிபெற்றது. மூன்றாவது போட்டியில் ஞானம்ஸ் அணிக்கும் கார்மேல் வோய்ஸ் அணிக்குமிடையில் நடைபெற் றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 8 ஓவர்களில் 7 விக் கெட்டை இழந்து 62 ஓட்டங் களைப்பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் வோய்ஸ் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 62 ஓட்டங்களைப்பெற்றதனால் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

சுப்பர் ஓவரில் ஞானம்ஸ் ஒரு ஓவரில் 5 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் வோய்ஸ் 4 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் ஞானம்ஸ் அணி வெற்றிபெற்றது.

நான்காவது போட்டி வள்ளுவர் அணிக்கும் பிரைட் அணிக்கும் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் 8 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 82 ஓட்டங்களைப்பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிரைட் 7 விக்கெட்டை இழந்து 39 ஓட்டங்களை பெற்றதனால் வள்ளுவர் அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது போட்டியில் சரஸ்வதி அணிக்கும் ஞானம்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 77 ஓட்டங்களைப்பெற்றனர்.

பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய சரஸ்வதி 6 விக்கெட்டை இழந்து 78 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

ஆறாவது போட்டியில் வள்ளுவர் அணியும் ஞானகலா அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய வள்ளுவர் 8 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து [illegible] ஓட்டங்களைப்பெற்றனர்.

பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய ஞான கலா 7 விக்கெட்டை இழந்து 35 ஓட்டங்களை பெற்றதனால் வள் ளுவர் அணி 29 ஓட்டங்களால் வெற்றிபெற்று காலிறுதியில் அரி யாலை சரஸ்வதி அணியுடன் மோதவுள்ளனர்.

# ஐ.சி.சியின் விருது வழங்கலை புறக்கணிக்க பாகிஸ்தான் முன்னாள் வீரர்கள் கோரிக்கை

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விருது வழங்கல் விழாவை பாகிஸ்தான் கிரிக்கெட் அணியும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் புறக்கணிக்க வேண்டுமென பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வீரரான சயீட் அஜ்மல் விருதுக்கான குறும் பட்டியலில் இடம் பெறாமை காரணமாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளரான சயீட் அஜ்மல் விருதுக்காகக் கருத்திற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் டெஸ்ட் போட்டிகளில் 12 போட்டிகளில் பங்குபற்றி 72 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவராகக் காணப்படுகிறார். எனினும் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட டெஸ்ட் வீரர்களுக்கான குறும் பட்டியலில் சயீட் அஜ்மல் இடம்பெற்றிருக்கவில்லை. மாறாக குமார் சங்கக்கார, வேர்ணன் பிலாந்தர், ஹசிம் அம்லா, மைக்கல் கிளார்க் ஆகியோர் இவ்விருதுக்காக வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்குறும்பட்டியலில் சயீட் அஜ்மலை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் கோரிக்கையை சர்வதேசக் கிரிக்கெட் சபை நிராகரித்ததோடு, 32 பேர் கொண்ட கிரிக்கெட் வின்னர்களின் வாக்கெடுப்பில் தங்களால் தலையிட முடியாது எனவும் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ரீட் லத்தீஃப், சயீட் அஜ்மலை சர்வதேசக் கிரிக்கெட் சபை நிராகரித்துள்ள விதம் நீதியற்றது எனவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது திருப்தியின்மையை வெளிப்படுத்த வேண்டும் எனவும், விருது வழங்கல் விழாவை பாகிஸ்தான் அணி பகிஷ்கரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பதவி விலக 2.69 கோடி ரூபா நஷ்டஈடு கோருகிறார் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தலைவர் மஜோலா



தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையில் இருந்து பதவி விலக வேண்டும் என்றால், தனக்கு ரூ.2.69 கோடி நஷ்டஈடு தர வேண்டும் என்று அதன் தலைமை நிர்வாக அதிகாரி ஜெரால்ட் மஜோலா கூறியுள்ளார். கடந்த 2009ல் மக்களவை தேர்தல் நேரத்தில், ஐ.பி.எல்.2 சீசன் போட்டி வந்தது. இதற்கு பாதுகாப்பு அளிக்க முடியாது என்று பல்வேறு மாநிலங்களும் பின் வாங்கிய நிலையில், போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டன.

அப்போதும், தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாக அதிகாரியாக ஜெரால்ட் மஜோலா இருந்தார். ஐ.பி.எல். போட்டியை கணக்கில்காட்டி, தனக்கும், சபையில் உள்ள மற்ற ஊழியர்களுக்கும் பெருமளவில் போனஸ் போட்டுக் கொண்டார். இந் நிலையில், தென்னாப்பிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சர் பிகைல் பாலூலா, இதுகுறித்து விசாரணை நடத்துவதற்காக நிகோல்சன் என்பவர் தலைமை யில் விசாரணைக் குழுவை அமைத்தார்.

இக்குழு தன்னுடைய பரிந்துரையை வெளியிட்டுள்ளது. அதில், முறைகேடாக மஜோலா போனஸ் பெற்றுக் கொண்டுள்ளார். ஒழுங்கு விதியை மீறி செயல்பட்டுள்ள அவர் மீது நடவடிக்கை எடுப்பதுடன், போனஸ் பணத்தையும் திரும்ப பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

# பீற்றர்சனுக்கு ஒப்பந்தம் மறுப்பு



இங்கிலாந்தின் டெஸ்ட் தலைவராகக் காணப்பட்ட அன்ட்ரூ ஸ்ட்ரோஸ், பயிற்றுவிப்பாளர் அன்டி ஃபிளவர், அணியின் சில வீரர்கள் ஆகியோரோடு ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவும், அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ட்ரோஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை தென்னாபிரிக்க வீரர்கள் சிலருக்கு அனுப்பினார் என்ற காரணத்தினாலும் கெவின் பீற்றர்சன் தற்போது இங்கிலாந்து அணியில் சேர்க்கப்படவில்லை.

இந்நிலையில் அறிவிக்கப்பட்டுள்ள 10 பேர் கொண்ட தேசிய மத்திய ஒப்பந்தப் பட்டியலிலும், 4 பேர் கொண்ட உப தேசிய ஒப்பந்தத்திலும் கெவின் பீற்றர்சனுக்கு இடம் வழங்கப்படவில்லை.

கெவின் பீற்றர்சனுக்கும் அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி ஃபிளவருக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவித்த இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை, அவை தனிப்பட்ட ரீதியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வீரர்கள்:

மத்திய ஒப்பந்தம்: ஜேம்ஸ் அன்டர்சன், இயன் பெல், ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் ப்ரோட், அலஸ்ரெயர் குக், ஸ்டீவன் ஃபின், ஒய்ன் மோர்கன், மற் பிரயர், கிரேம் ஸ்வான், ஜொனதன் ட்ரொட்

உப ஒப்பந்தம்: ஜொனி பெயர்ஸ்ரோ, ரவி போப்பாரா, கிறெய்க் கீஸ்வெட்டர், கிரஹாம் ஒனியன்ஸ்.

# அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் செரினா வில்லியம்ஸ் சம்பியன்

ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் போட்டிகளின் பெண்கள் தனிநபர் பிரிவில் ஐக்கிய அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். உலகின் முதற்தர வீராங்கனை விக்டோரியா அஷரெங்காவை இறுதிப் போட்டியில் வீழ்த்தியே அவர் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் செரினா வில்லியம்ஸ் 6-2, 2-6, 7-5 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டார். பெலாரசைச் சேர்ந்த விக்டோரியா அஷரெங்கா கடுமையான போட்டியை வழங்கிய போதிலும் செரினா வில்லியம்ஸ் தனது அனுபவத்தை வெளிப்படுத்திப் போட்டியை வென்றார்.

இது ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் வரலாற்றில் செரினா வில்லியம்ஸ் பெற்றுக் கொள்ளும் 4ஆவது தனிநபர் சம்பியன் பட்டமாகும். அத்தோடு இது அவரது 14ஆவது தனிநபர் கிராண்ட்ஸ்லாம் பட்டமுமாகும்.

இதேவேளை நேற்று இடம் பெற்ற பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் இத்தாலியின் சாரா எரானி, ரொபேர்ட்டா வின்சி ஜோடி செக் குடியரசைச் சேர்ந்த அன்ட்ரியா லவாக்கோவா, லூசி ரடெக்கா ஜோடியை 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றது.



ஆகால் போட்டியில் 2ஆம் நிலை வீரரான நொவக் ஜொக்கோவிச் 2-6, 6-1, 6-4, 6-2 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 11.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது